பலசுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஆகஸ்ட் 2020


பலசுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
ஆகஸ்ட் 2020
ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் பாலமுனை பாறூக்கின் சிலதடங்கள்

## ஓவியர் அருண்குமார் நேர்காணல்

## எண்ணமும் வண்ணமும்

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

தோற்றம் 1972 | ஆகஸ்ட் 2020



*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
**அமின் மொஹமெட்**

*இணையாசிரியர் :*
**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**

*நிர்வாக ஆசிரியர் :*
**சஃபி மொஹமெட்**

*ஆசிரியர் குழு :*
**ஹிப்ஸீா் ரஹ்மான்**
**கவிஞர் பாலமுனை பாறூக்**
**நெல்லை உலகம்மாள்**
**கவிஞர் தென்றல் கவி**
**கவிஞர் அ.முத்துசாமி**
**கவிஞர் ஈழபாரதி**

*ஆலோசகர்கள் :*
**பாட்டரசர் கி. பாரதிதாசன்**
**கவிதாயினி சக்தி ஜோதி**


எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...


Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com


புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

## விரைவில் வெளிவரவிருக்கும் நூல்கள்...











தமிழ்நெஞ்சம் பேசுகிறது...

# அன்பானத் தமிழ்நெஞ்சங்களே

வணக்கம்!

இன்று, நாம் எங்கு நோக்கினும் போட்டியும், பொறாமையும் நிறைந்து, மலிந்து கிடப்பதைக் காண முடிகிறது. மனிதருக்கு ஆரோக்கியமான போட்டி இருப்பது மிக அவசியமான ஒன்றுதான். அது நம் முன்னேற்றத்திற்கு வழிகோலும். ஆயினும், கூடவே வரும் பொறாமையானது எமக்கு ஊறு விளைவிக்கக் கூடியது. பலரின் பொறாமை அவர்களையும் உருக் குலைத்து, மற்றவர்களையும் உருக்குலைப்பது வேதனைக்குரியதே!

ஒருவரின் நல்ல செயல், முன்னேற்றம் என்பனவற்றைப் பார்த்து பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை, பொறாமைப்பட்டு விடாதீர்கள். பொறாமையெனும் காட்டுத்தீ, நம் நல்லுணர்வுகளை ஒரு நொடியில் பொசுக்கிச் சிதைப்பது மட்டுமல்லாமல், மற்றவர்களையும் சங்கடத்திற் குள்ளாக்கி வேதனைப்பட வைக்கிறது . இத்துர்க்குணமானது ,தம் கையறு நிலையையே மற்றவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறதெனும் உண்மையை அப்படிப்பட்டவர்கள் புரிந்து கொள்வதேயில்லை

ஒருவரின் திறமைகளை, முன்னேற்றத்தைப் பார்த்துத், தம் திறமைகளை வளர்த்து தாமும் முன்னேறுவதில் தவறேதுமில்லை. ஆனால், அதுவே பொறாமையாக உருப்பெறும் போதுதான், உங்களையறியாமலேயே இடையூறு விளைவிக்க முனைகையில் பிரச்சினை தலைதூக்க ஆரம்பிக்கிறது மற்றவர்களை வசை பாடவும், வாய்க்கு வந்தபடி பேசவும் முயல, இதுவே மற்றவர்களின் மத்தியில் உங்களைப் பற்றிய தரக்குறைவான மதிப்பீட்டை உருவாக்கும்.

அடுத்தவர் முயற்சிகளை முடிந்தால் பாராட்டுங்கள். முடியவில்லையாயின், சிறு புன்னகையுடன் கடந்திடுங்கள். அதைவிடுத்து,அவர்களைப் போல் நாமில்லையே எனும் ஏக்கம், பொறாமையாக வெளிப்பட அவ்வெண்ணமே மன அழுத்தமாக மாறி, உங்களை நோயில் வீழ்த்தக்கூடும். பொறாமைத்தீ கந்தகக்காடாக உங்கள் மனதுக்குள் கனன்று, உங்களையே சுட்டெரித்துப் பொசுக்கக் கூடும்.

ஆகவே, இத்தீய குணம் நம் மனதை ஆக்கிரமிக்காமல் தவிர்த்து, நம்மிடம் மறைந்திருக்கும் திறமைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்தினால், நிச்சயமாக வளமான முன்னேற்றம் நம்மை வரவேற்கக் காத்திருக்குமென்பதில் ஐயமில்லை. பொறாமை நீக்கி வாழ்ந்து பெருமை சேர்ப்போமாக! நன்றி!

அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்

# வேறில்லை நீயின்றி இங்கு..

அந்தாதி வெண்பா



இடையில் குடம்சேர இன்பத்தே னூற
நடந்தாள் அழகுமுகம் காட்டி - மடக்கும்
அதிரசச்சி ரிப்போடு அன்ன நடையில்
சதிராடிச் செல்லுதோ பூ.

பூவின் புதுவாசம் உள்ளம் புகுந்ததால்
தேவிம லர்முகம் தேடியே - தாவிக்
குதித்துப் பறந்திடும் தும்பி களின்று
சுதிகொண்டு பாடுதோ பா.

பாவெனத் தித்திக்கும் பாற்குடமே வந்துநீ
தாவொரு முத்தமென கேட்டங்குத் - தாவிடும்
மான்,தன் இணையிவள் தானென்று நாடியே
தோன்றுதோ மங்கையின் பின்பு.

பின்னழகும் தாலாட்ட புன்னகை தேனூட்ட
இன்பத் தரவே,நீ செப்பிடு- உன்னெழில்
நாடி இறங்கிய மேகத்தைக் கண்டதால்
ஆடவந்த தோமயில் கள்.

மயிலென வந்தாள் மயக்கத்தைத் தந்தாள்
குயிலாய் இசைத்தாள் குரலால் - இயைந்தநல்
கானமாய் சேர்ந்தாள் மலைக்கண் அறுசுவைத்
தேனாய்ச் சுவைதந்தாள் மது.

மதுரசம் சிந்திடும் மங்கையின் கன்னக்
கதுப்பிலே போனேன் மயங்கி - அதனில்
களிக்க, மனமும் கிளர்ந்தே உருகத்
தளிரவள் கொண்டாள் பிணைப்பு.

இணைந்தநல் மங்கை எனதிதயம் சேர
மனையாய் வருவாளோ நாடி - புனைவேன்
கவிதை அவள்மேல் படிக்கப் புனைந்து
புவியின் அழகு நிலவு.

நிலவொன்று வந்து நிலைமறக்க வைத்து
உலவுதென் உள்ளம் புகுந்து -கலகல
வென்றே சிரித்துஅவள் நிற்க மகிழ்கிறேன்
என்மனதில் இன்பத்தை ஏற்று.

ஏற்றிடுவாய்க் காதலை எழிலாளே எனதுளம்
உற்றவள் ஆவாய் உவகைதந்து - பெற்றேன்,
உளத்தால் மகிழ்ந்தேன், உனது நினைவிலே
திளைத்தேன்,நீ என்தோட்டப் பூ.

பூவென்ன பூவோஉன் புன்னகை மேலன்றோ
பாவைக்கோ ரீடுமே பாருளதோ - பாவெனக்
கேட்கும் உனதுகுரல் கேட்ட மனத்தாலே
மாட்டேன் ரசித்திட வேறு.

**கு.லோகநாதன்**

## நேரிசை வெண்பா

அழகென்பேன்! நின்னை அமுதென்பேன்! என்னுள்
குழலிசையக் கொஞ்சும் குழந்தாய் - பழகிடும்
அங்கையின் அற்புதமாய் ஆகாயம் உள்ளவரை
சங்கத் தமிழ்மூன்றும் தா!

- தென்றல் கவி





பட்டாம்பூச்சி எழ
சற்று தடுமாற்றத்துடன்
நிமிர்ந்த மலர்

நீல வானம்
நீண்ட தூரம் செல்கிறது
பறவைக்கூட்டம்

அழகான சிற்றருவி
நெருங்கிச் செல்கையில்
வழுக்கும் பாறைகள்

தொடர் மழை
மலைப்பாதையில் வழியெங்கும்
புதிய நீர்வீழ்ச்சிகள்

பூச்சிகள் ஒலியெழுப்ப
இருள் சூழ்ந்தும் ரசிக்கிறேன்
கானகத்து நீரோடை

பசுமையான வனம்
கண்மூடி ரசிக்கையில்
பறவைகளின் மொழி...!

- அ.அண்ணாமலை

## சிறகெனும் நம் குறியீடு...

என் மௌனம் முழுவதும் வீசும்
உன் வாசனை...
மூச்சடைக்கும் காதல் நெடியின் சூழ்புகை...

வசீகர வீச்சின் மின்னல் நிமிடங்கள்
சொக்கி விழும் பந்தல் பார்வைகள்
படரும் நேசக் கொடி
பிரிதொரு நாளுக்காய் தேக்கி வைத்த
யாம உளறலின்
மொழி பெயர்ப்புகள்...

நீ கொடுத்த நீல வானம் சற்று நீளம்
நாள் வளர்த்த சிறகு சிறு பிசகு...
இருக்கட்டும், இருக்கட்டும்
பிழை வாக்கியம் பேரழகு
மழலைக்கும் மங்கைக்கும்...

எல்லாம் உன்வழி அறிந்த உயிரோட்டம்
என் கவிதைக்கு உணர்வோட்டம்
நாமான நானும் நீயும் இனி
உயிர் மெய் கலந்த மெய் உயிர்..!!!

- கிறிஸ்டினா அருள்மொழி



# எண்ணமும் வண்ணமும்

**ஓவியர் அருண்குமார் தமிழ்நாடு, வேலூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். அவரது முழுநேர எண்ணமும் உழைப்பும் ஓவியம் வரைவது மட்டும்தான். அவரிடம் நேர்காணல் செய்வதில் மகிழ்ச்சியடைகிறோம். இனி அவரிடம்...**



**ஓவியங்களில் உங்கள் ஆரம்பகால அனுபவங்கள் பற்றி?**

நான் சிறுவயதில் இருந்து ஓவியம் வரைவது உண்டு. எனது பள்ளியில் உள்ள ஓவிய ஆசிரியை என் ஓவியங்களைப் பார்த்து, பள்ளியில் நடந்த ஓவியப்போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைத்தந்து ஆர்வத்தைத் தூண்டினார். அவற்றில் கலந்து கொண்டு, முதல் பரிசு வாங்கியுள்ளேன். அதிலிருந்து எனக்கு ஓவியத்தின் மேல் மிகுந்த ஆர்வம் உருவானது. என் தந்தையும் என்னை மிகுந்த அளவில் ஊக்குவித்தார். எனது ஓவியப்பயணம் தொடங்கிய நாட்கள் இவையே!

**ஓவியத்தின் வகைமைகள் எவை?**

ஓவியத்தில் பல வகைமைகள் உள்ளன. பென்சில் ஓவியம் (ஸ்கெட்ச்), வாட்டர் கலர் ஓவியம், ஆயில் கலர் ஓவியம், அக்ரலிக் கலர் ஓவியம், தஞ்சை பாணி ஓவியம், மாடர்ன் ஆர்ட்(நவீனகலை) ஓவியம் முதலிய வகைமைகள் உள்ளன. மற்றும், பல ஓவியர்கள் தன் தனித்தன்மைகளால் பல வகைகளில் ஓவியங்களைப் படைத்து வருகிறார்கள்.

**ஓவியம் வரைய முறையாகக் கற்றீர்களா?**

ஆமாம்! முறையாகக் கற்றுள்ளேன். தலைச்சிறந்த ஓவிய ஆசிரியர்களிடம் ஓவிய நுணுக்கங்களை கற்றுள்ளேன்.

**இதுவரையில் கலந்து கொண்டுள்ள ஓவியப் போட்டிகள் பற்றி?**

## நேர்காணல்

# தமிழ்நெஞ்சம் அமின்



இதுவரை பல போட்டிகளில் கலந்து கொண்டிருக்கிறேன். முக்கியமாக, இந்திய அளவில் நடைபெற்ற ஒரு ஓவியக் கண்காட்சியில், பல தலைசிறந்த ஓவியர்களும் கலந்து சிறப்பிக்க அதில் நானும் ஒரு போட்டியாளராகப் பங்கேற்றேன்.

**உங்கள் ஓவியங்களில் அதிக பாராட்டைப் பெற்றது எது?**

எனது ஓவியக்கலைமுறை முழுவதும் தமிழ் கலாச்சாரத்தைப் பின்தொடர்ந்து இருக்கும். தமிழ்ப் பெண் குழந்தையை வரைந்த ஓவியம் மிகவும் பாராட்டுப் பெற்றது. சென்னையில் உள்ள லலிதகலா அகடமி என்னும் தலைசிறந்தஓவியக்கூடத்தில்அக்கண்காட்சி நடந்தது. அதற்குப் பின் என் ஓவியத்தைப் பார்த்த ஊடகங்கள், என் ஆக்கத்தை ‘காமதேனு’ எனும் பத்திரிகை வாயிலாக வெளியிட்டன. அது என் ஓவியத்திற்கும், உழைப்பிற்கும் கிடைத்த பாராட்டு என்று மகிழ்ச்சி அடைந்தேன். அதன்பின் பல விருதுகளையும் வாங்கியுள்ளேன். சேலம் மாவட்டம் களப்பண்பாட்டுத்துறை எனக்கு ‘ஓவியச் சுடர்’ எனும் விருதை வழங்கி கௌரவித்தனர். பின் வடச்சென்னை தமிழ்ச் சங்கம் என் ஓவியத்திறமையைப் பாராட்டி ‘ஓவியக்கலைமணி’ விருதை வழங்கியது.




வேலூர் Axlium Womens College ல் கேடயம் பெறும் நல்லத் தருணம்.

## உங்கள் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்ட நிகழ்வுகள் எப்படி அமைந்தன?

என் ஓவியங்களைக் கர்நாடகாவில் உள்ள ஓவியக்கலைக் கல்லூரியில் நடந்த ஓவியக் கண்காட்சியில்தான் முதன்முதலில் காட்சிப்படுத்தினேன், பல ஆயிரக்கணக்கான ஓவியர்கள் பங்கேற்ற அந்த நிகழ்வில் என் ஓவியமும் இடம்பெற்றது எனக்கு மிகவும் மகிழ்ச்சியான தருணம். பின், பல ஓவிய கெலரிகளில் என் ஓவியங்களைக் காட்சிப் படுத்தியுள்ளேன்.



## உங்கள் ஓவியங்களின் தனிப்பாணி பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

நான் தனிப்பாணியாக பரிணாமம் பெறுவதற்கு முக்கிய காரணகர்த்தா, தலை சிறந்த ஓவியர் திரு. இளையராஜ சுவாமிநாதன் அவர்களிடம் ஓவிய நுணுக்கங்களைக் கற்றுக் கொண்ட போது, அவரிடம் எனக்கென தனிப்பாணியை உருவாக்குவ தெப்படி என வினவினேன். அதற்கவர் ''நீங்கள் குழந்தைகளை மையக் கருவாகக் கொண்டு ஓவியம் வரையலாம்'' என்றார். நானும் அதைப் பின் பற்றி வரையத் தொடங்கினேன்.

## ஓவியத்தில் புது உத்திகள் எவையேனும் கையாளுகிறீர்களா?

எனது ஒவ்வொரு புதிய ஓவியத்திலும் பல மாறுபட்ட உத்திகளை, ஓவியத்தைப் பொறுத்து உட்புகுத்தி வருகிறேன். அவைகள் எனக்கு கைகூடியும் வருகிறது.

Achalam art gallery நடத்திய ஓவிய கண்காட்சியில் சிறந்த ஓவியத்துக்கான விருதினை நடிகர் ரமேஷ்க்கன்னா வழங்க உடனிருப்பவர் நடிகர் வையாபுரி



**உங்களை மிகவும் கவர்ந்த ஓவியக் கலைஞர் யார்?**

ஓவியர் 'ராஜா ரவிவர்மா'. பண்டைக்கால ஓவியர் அவர். அவருடைய ஓவியக்கலை நுணுக்கங்களை நான் பார்த்து ரசித்த துண்டு. பின் இன்றையகாலகட்டத்தில்,எனக்குமிகவும் பிடித்த ஓவியர் 'இளையராஜ சுவாமிநாதன்'. இவருடைய ஓவிய நுணுக்கங்கள் மிகவும் தத்ரூபமாக இருக்கும். நான் அவரிடம் சகல ஓவிய நுணுக்கங்களையும் கற்று, என் ஓவியங்களில் பயன்படுத்தியுள்ளேன்.

**ஓவியங்களின் மூலம் சமூகத்துக்கு ஏற்படுத்தக்கூடிய விழிப்புணர்ச்சி பற்றி?**

ஆம்! சமீபத்தில், இன்று சமூகத் தொற்றாகப் பரவிவரும் கொரோனாவிலிருந்து பாது காத்துக் கொள்ள முகக்கவசமணிந்து, வெளியே செல்ல வேண்டுமென்பதை வலியுறுத்தும் ஓவியமொன்றை வரைந்தேன். அது பெரியளவில் புகழ் பெற்றுத் தந்தது. (ஓவியம் இதழின் பின் முகப்பில்) 'நியூ 7' தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டு மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுத் தந்தது இவ்வோவியம்.



**சமூகச் சீர்கேடுகளில் இருந்து இச் சமூகத்தைக் காக்கும் விதமாக ஓவியங்கள் வரைவதுண்டா?**

காலத்திற் கேற்றவாறு ஓவியங்களின் மூலம் நிச்சயமாக சமூகச்சீர்திருத்தத்தைக் கொண்டு வரலாம். எங்களைப் போன்ற ஓவியர்களால் ஓவியங்கள் மூலம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி, பாரிய மாற்றங்களை உருவாக்கலாம். கொரோனா போன்ற விஷயங்களாக மக்

சரஸ்வதி காலேஜ் ஆர்ட்ஸ் / சைன்ஸ் வளாகத்தில் க்ல்லூரி தலைமை ஆசிரியர் அவர்களால் ஓவியர் அருண்குமார் பொன்னாடைப் போர்த்தி கௌரவிக்கப்படுகிறார்.





இலக்கிய ஆளுமைகள் வேந்தர் திரு. விஸ்வநாதன் மற்றும் வடசென்னை தமிழ்ச்சங்கத் தலைவர் இளங்கோ அவர்களால் ஓவியக் கலை மாமணி விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படும் வகையில் ஓவியங்களைத் தீட்டி வருகின்றார்கள். இதை உணர்ந்து மக்கள் அவர்களின் சமூக கடமைகளைக் கடைப்பிடிப்பார்கள் என்று உணர்கிறேன்.

### மாடர்ன் ஆர்ட் செய்வதில்லையா?

புதுச்சேரி ஆர்ட் அகாடமி நடத்திய அனத்துலக ஓவியக்காட்சி யில்... ஓவியரும் ஆசிரியருமான திரு அல்போன்ஸோஅருள்தாஸ் அவர்களால் பாராட்டப்பட்ட தருணம்.



மாடர்ன் ஆர்ட் சில ஓவியர்கள் தங்களின் எண்ணங்களை மாடன் ஆர்ட் ஆக வரைந்து வருகிறார்கள். நான் இதுவரை மாடர்ன் ஆர்ட் செய்ய முயற்சித்தது இல்லை. என்னுடைய ஓவியப்பாணியில், நான் வேறு வடிவில்தான் செய்து வருகிறேன். எனது ஓவியங்களைப் பார்த்தால் புரியும்.

### பத்திரிகை ஓவியம் பற்றி... ?

ஆம். முன்பெல்லாம் புத்தகங்களின் அட்டைப்படத்தை ஓவியங்களாக அச்சிட்டு வருவார்கள். இப்பொழுது அது மிகவும் குறைந்து விட்டது.

கணினிவாயிலாக.புகைப்படங்களைஉருவாக்கி அச்சிட்டு வருகிறார்கள். ஓவியர்களை வளர்க்கும் வகையில் பத்திரிகைகளில் வாய்ப்பளிக்குமாறு பத்திரிக்கை யாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

### உங்கள் எதிர்கால இலட்சியம் ?

நான் என் வாழ்க்கையில் ஓவியத்தால் சாதிக்க

வேண்டுமென பல முயற்சிகள் எடுத்து வருகிறேன். என் ஓவியங்கள் உலகம் அறியும் வண்ணம் இருக்க வேண்டுமென்பதில் தெளிவான சிந்தனையோடு இருக்கிறேன். அதன் வாயிலாகத்தான் தமிழ்க்கலாச் சாரத்தை மையமாகக் கொண்டு அமையும் என் ஓவியங்கள், உலகப்புகழ் பெற முடியும்.' வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை' என்ற கொள்கையோடு என் வாழ்க்கையில் சாதிக்க வேண்டுமென இருக்கிறேன்.

### தங்களின் குடும்பம் பற்றி?

எனக்கு ஓவியத்துறையில் சிறு வயதிலிருந்தே ஆர்வம் இருப்பதைப் புரிந்து கொண்ட என் தந்தை என்னை ஊக்குவித்து துணை நின்றார்.என் தந்தை பற்றிய ஒரு சிறப்புக் குறிப்பை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அவர் பெயர் V.G.சேட்டு.அவர் சிறந்த நாதஸ்வரக் கலைஞராவார். அவர் சில தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் ஆல் இந்தியா ரேடியோவிலும் கலந்து கொண்டு நாதஸ்வரம் வாசித்துள்ளார். அவருக்கு தமிழக அரசினால் (நாதஸ்வர) கலை சுடர்மணி எனும் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.



### ஓவியம் தவிர்ந்த ஏனைய ஈடுபாடுகள்?

*எனக்குத் தெரிந்தது பிடித்தது எல்லாமே ஓவியம் மட்டுமே! அது தவிர, கர்நாடக இசையை ரசித்துக் கேட்பேன்.

### தமிழ்நெஞ்சம் குறித்து?

புதுச்சேரியில் நடந்த இந்திய அள்விலான ஓவியக்காட்சியில்... புதுவை முன்னால் முதல்வர் இரங்கசாமி அவர்களால் சிறப்பிக்கப்பட்டது.



நான் முதற்கண் தமிழ்நெஞ்சம் நிர்வாகத்திற்கு வணக்கத்தையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள் கிறேன். என்னைப் போன்ற கலைஞர் களை சிறப்பிக்கும் வகையில் அடையாளம் கண்டு, எங்களை கௌரவிப்பதற்கு நன்றிகள்! இன் னும், பல துறைகளில் எத்தனையோ கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர் களையும் தமிழ்நெஞ்சம் இனம்கண்டு ஊக்குவிக்கத் தவறாது என நம்புகிறேன். மேலும் இதழ் சிறப்பாக வளர்ந்திட வாழ்த்துகள். நன்றி!



# குறிஞ்சி நிலம்

வெற்பு நிறைந்த இடங்களெல்லாம்
மெல்லப் பாயும் சுனையருவி
ஒற்றைப் பாதை வழியெல்லாம்
ஓங்கி வளரும் மூங்கில்கள்
பற்றைப் பூக்கள் மலர்ந்திருக்கும்
பார்க்கப் பார்க்க எழில்தருமே
பொற்றைக் காடு வரைகளுமே
பொன்னாய் மின்னும் குறிஞ்சியிலே

ஏரி சுனைகள் பலவுண்டு
எங்கும் அருவி பாய்ந்தோடும்
மாரி காலம் மாறியதும்
மண்ணில் நீரும் வற்றிவிடும்
ஊரில் பஞ்சம் வருகையிலே
உண்ண உணவு கிடைப்பதில்லை
சோறு இன்றி மக்களெல்லாம்
சோர்ந்து விடுவார் கோடையிலே

ஏற்ற நிலத்தை தேர்ந்தெடுக்க
ஏறு நிலத்தை பண்படுத்தும்
சேற்று மண்ணில் கால்வைக்கச்
சேயோன் அருளை வேண்டுவார்கள்
நாற்று போடும் வேளையிலே
நாதம் இசைத்து மகிழ்வார்கள்
காற்றில் மிதக்கும் ஓசையிலே
காதல் செய்யும் பைங்கிளிகள்

கிளிக ளெல்லாம் வட்டமிட்டுக்
கீச்கீச் என்றே குரலெழுப்பும்
ஒளிந்து வாழும் பூச்சியெல்லாம்
ஒலியைக் கேட்டு மகிழ்ந்திருக்க
நெளிந்து செல்லும் புழுக்களெல்லாம்
நிரையாய் ஊர்ந்து நடனமாடும்
தொளியில் நடக்கும் காட்சியெல்லாம்
துயரம் மறக்க வைத்திடுமே

மேட்டு நிலத்தில் தலையசைக்கும்
வேங்கை மூங்கில் மரங்களெல்லாம்
காட்டில் குரங்கு கரடியெல்லாம்
கலக்க மின்றித் திரியுமன்றோ
ஆட்டம் போட மயிலெல்லாம்
அசைந்து களிக்கும் பைங்கிளிகள்
கூட்டி லிருக்கும் தேனீக்கள்
குறிஞ்சி மலரில் மொய்த்திடுமே

நிர்மலா சிவராசசிங்கம்

# வரவா தரவா

ஏடி வரதராசன்

வலையிடுங் கண்கள் என்னை
வருடிய அக்க ணத்தே
உலையிடும் நெஞ்சில் கொண்ட
உண்மைகள் எல்லாம் மோகக்
கலையிடும் என்னென் னென்ன
கற்பனை  உதிர்கும் என்று
குலையிடும் கனிகள் தொட்டு
கூறவே அமர்ந்து கேளாய்

விண்ணெழில் தோற்கும் வண்ணம்
விரைமலர் சூடிப் பெண்மைப்
பின்னெழில் காட்டி நின்றால்
பிழையென நினைந்தேன் ஆனால்
கண்ணெழில் செப்பும் அந்தக்
கதைகளை நானும் கேட்க
முன்னெழில் ஏதோ ஒன்றை
முனகிய தென்ன சொல்லாய்

தூரமே மோகம் கூட்ட
துடியிடை நினைவோ என்னுள்
ஈரமே சேர்த்துச் சேர்த்து
இளம்நதி யாக மாற
பாரமே கட்டில் மீது
பழகுமக் காலம் வந்தால்
வாரமும் நொடிகள் ஆகி
வதைக்குமே நானென் செய்ய

அந்திவான் அவளோ டெந்தன்
ஆகமும் கலக்கும்; பின்னே
சிந்திவான் ஒளிபோம் முன்னம்
சிணுங்கிடும் வளையல்; உண்ணும்
பந்திவான் வைக்கும் நித்தம்
பசிகளும் தொடரும்; மிச்சம்
உந்திவான் பார்க்கும் சொல்லா
ஒருவிரல் காதல் கேட்கும்



# சுனை சாமியார்

– பாரதிசந்திரன்

(முனைவர் செ சு நா சந்திரசேகரன்)



"தாடி, மீசை, காவி உடையோடு இருந்தாதான் சாமியாரா? அப்படியெல்லாம் இல்லை. இவன் பேண்ட் டீ-ஷர்ட் போட்டுக்கிட்டு தான் எப்பொழுதும் இருக்கான். என்ன பேச்சு கம்மியா இருக்கு. சாப்பாடு வேற மாதிரி அவ்வளவு தான். மற்றபடி நம்மள மாதிரி தான் பார்க்கிறதுக்குத் தெரியும்". என்ற மதினியின் வாயைப் பார்த்தபடியே கேட்டுக் கொண்டிருந்தான் சரவணன். மதினியின் வலப்புறத்தில் மதியச் சாப்பாட்டிற்குக் காய் நறுக்கிக் கொண்டே ஏதோ உலகத்தில் நடக்காத புதுக் கதையைக் குழந்தை வாய் திறந்து கேட்பது போல் அக்காவின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாள் சரவணன் மனைவி சரசு.

தன் அக்காவின் வீட்டிற்குச் சென்றால், புது உலகம் சென்ற சந்தோசம் தான் அவளுக்கு. தாங்க முடியாது. தண்ணீர் கூட, இவ்வூர் மாதிரி வராதுன்னு ஓராயிரம் முறை கூறியிருப்பாள். இருந்தாலும் அது மாதிரி கூறுவது அவளுக்குப் பெரிதும் பிடித்து இருந்தது.

"அது சரி, அவன், அம்மா அப்பா இவன மாற்ற முயற்சிகள் ஏதும் எடுக்கலயா? இப்படி ஒரேடியா சாமியாராக மாறிய கதைய உலகத்துல, நான் கேட்டதே இல்லை" என்று பேச்சைச் சூடாக்கினாள்.

பக்கத்தில், மதினியின் மகள்கள் ஆளுக்கொரு போனை கையில் வைத்துக் கொண்டு ஏதோ விளையாடிக் கொண்டிருந்தார்கள் ஏதும் கேட்காதது போல். ஓரத்தில் இருந்த கட்டிலில் மல்லாக்கப் படுத்திருந்த மதினியின் கணவர் திரும்பித் திரும்பிப் பேசிக்கொண்டு இருந்தார்.

மதனி ஆரம்பித்தார், "அவங்க என்ன பண்ணுவாங்க, மருமக இறந்து போனதில் இருந்து அவர்களைக் கவனிக்கவே ஆள் வேண்டியிருக்கும். ஒருத்தர் மாற்றி ஒருத்தர் போய் தான் பார்த்துக்கிறோம். இவனப் பாக்குறப்ப, எல்லோரும் அதை, இதைப் பேசினதைப் பார்த்து, கண்டிஷனா சொல்லிப் புட்டான். என்னன்னா, 'எல்லோரும் வர்றப்ப போறப்ப இப்படிப் பேசினா, இனி, நான் வீட்டுக்கு வரமாட்டேன். தோட்டத்திலேயே நான் தங்கிப் புடுவேன். எதுவும் பேசக்கூடாது. மனசு மாற, நான் மாறுவேன். அதுவரை என்னைக் கட்டாயப்படுத்தாதீர்கள். சொல் லிட்டேன்.' அப்படின்னு சொல்லிப்புட்டான். அதிலிருந்து, அத்தை, மாமா கூட, ஏன்? இவன் சித்தப்பா கூட எதுவும் பேசவில்லை" எனக் கூறிக் கொண்டே எழுந்து சமையல் அறைக்குள் நுழைந்தாள்.

"யாரு குருன்னு சொல்லிட்டு வாய் நிறைய எப்பவும் பேசிகிட்டு இருப்பாரே, அவரால கூடவா இவனை மாற்ற முடிய


லையா?" என்றாள் சரசு.

மூன்று வயது சின்னவன் என்பதால், சிறுவயதி லிருந்தே, 'அவன்' 'இவன்' என்று தான் அக்கா தங்கை இருவரும் அழைப்பார்கள்.

"இல்லைப்பா, அவனுக்கு அமைதி இப்ப தேவை. அவனே பொண்டாட்டி செத்த துயரத்திலே இருக்கான். எல்லாரையும் போலவா இது. கொடுமையான சாவு. கல்யாணம் பண்ண ஒரே மாதத்தில் கழுத்தறுத்து கிடந்த மனைவியை யாருக்குத் தான் பார்க்கச் சகிக்க முடியும். இதுதான், இப்படிச் சாமியார் ஆக்கிடுச்சு". நீண்ட நேரங்களுக்குப் பிறகு கட்டிலில் படுத்தவாறு பேச்சின் உள்ளே நுழைந்தார் சுப்பு.

சரசு உடனே கட்டிலை நோக்கித் திரும்பி உட்கார்ந்து, "இல்ல, அத்தான் என்னதான் துக்கமாக இருந்தாலும், எல்லாத்தையும் எப்படி துறக்கிறது? விட்டுட முடியுமா? உலகத்தில் எல்லோரும் இப்படியா இருக்கிறாங்க? பாவடித் தெருவுல இருந்த வெத்தலைக் கிழவி பேத்தி இறந்தப்ப, அவளுக்கு இரண்டு பிள்ளை. மாப்பிள்ளை பிணம்கிடக்கிறப்பவே,தன்மாமாகிட்டபோய், 'என் பிள்ளைகளுக்கு வழி சொல்லுங்க? மாமா. யாரு அதுகள வளர்ப்ப, இனி? எங்க போவேன் நா?. உங்க இரண்டாவது மகள, எனக்கே கொடுத்துடுங்க. புள்ளைங்கள பார்த்துக் கொள்ளட்டும்.' என்று கேட்டானாம். இது தான் இப்ப உலகம். சாமியார் ஆயிட்டானாம், சாமி." என்றாள் எதார்த்தமான மனதோடு சரசு.

"காலைல சாப்பாடு எல்லாம் கிடையாதாம். ஒரு டம்ளர் பால் அவ்வளவுதான். குளிச்சதுக்கப்புறம் ஒரே தியானமாம். அவன் ரூம்முக்குள்ளே, இதுவரை யாரும் போனதே இல்லை, அதுவும், அவன் பொண்டாட்டி செத்ததுக்கு அப்புறம், கதவைத் தட்டினாலும் வெளியே வரவே மாட்டான். மத்தியானம் உப்பு புளி போடாம, நிலத்துக்கு அடியில் விளைந்த காய்கறி பருப்புக் குழம்பு. அவன் வயல்ல விளைஞ்ச பச்சரிசிச் சாதம். வீட்டுக்குத் தோட்டத்தில்



# பெண்ணியம் பேசு!

வலிகள் பல கொடுத்தான்
வானறிந்த ஆண்டவன் - அதில்
இன்பம் பல புரிந்தான்
இவ்வுலக ஆடவன்..

இறைவனால் படைக்கப்பட்ட ஒன்றில்
இல்லாத தீட்டை வைத்தான்!
இல்லற வாழ்வில் இருபாதி
பெண் என்றால் - ஏனோ
இரக்கமற்ற இறைவன் ஈரத்தைப்
பெண்ணினுள் வைத்தான்!

பெண்ணின் உடல் தீட்டென்றால்
பெண்ணின் வழிவந்தவன்
தீட்டென்பேன்!

மதங்கள் பல மாறினாலும்
மனித குணங்கள் மாறுவதில்லை!!

மதங்கள் பல மாறினாலும்
மனிதம் ஒன்றே!
மனிதம் மீறிய புனிதம் இல்லை!

தலை நிமிர்ந்து சொல்
தைரியமாக பெண்ணியம் பேசு.

**- சு. தமிழ் வாணன்**



இருந்து வரும் பசு மாட்டு பால் போதுமானது. அதிலிருந்து தயிருக்கு ஊற்றி, மோராக்கிக் கொடுத்தால் குடிப்பானாம். கடைப்பொருள் இதுவரைத் தொட்டதில்லை. மதியம் 3 மணிக்கு மேல் வெயில் தாழக் கிளம்புவான். யார் கிட்டயும் சொல்லிக்காம, அவனாக் கிளம்பிடுவான். தோட்டத்துக்கு போறவன், மறுநாள் காலை யில் பால், காய்கறிகளோடு வருவான். வீட்டாரோடு ஒரு வார்த்தையும் பேசுவ தில்லை. தோட்டத்துல பேசுவானோ?இல்லசைகையிலேயேஆடுவானோ தெரியல." சாமியார் கதை போய்க்கொண்டே இருந்தது.

தங்கையும் அக்காவும் இப்படி மெய்மறந்து அத்தை மகன் சாமியாரான ஒவ்வொரு அசைவை யும் பேசுவது கடுப்பா இருந்தாலும், சரவணன் யோசித்துப் பார்த்தான். சொந்த மாமா மகன், தடபுடலாக நடந்த கல்யாணம், இவர்கள் அப்பாவின் சொந்தத் தங்கச்சி மகன். இப்படி சோகத்தை அனுபவிப்பதை யாரால் தாங்க முடியும்?

'வயது வித்தியாசம் இல்லாமல் இருந் திருந்தால் சரசுவைத் திருமணம் செய்து வைத் திருப்பார்கள். பாவம் அதுவும் வாய்க்கல'. என மனதிற்குள் நினைத்தவாறே சரவணன் வீட்டி லிருந்து கிளம்பினான்.

"ஏங்க...எங்ககிளம்பிட்டீங்க" சரசு கேட்டாள்.

"இந்தா.. வாரேன்.. தெருக் கோடியில் இருக்கிற மலை அடி வாரத்தில் போய், கொஞ்ச நேரம் இருந்துட்டு வர்றேன்." சொல்லிட்டு சரவணன் கிளம்பினான்.

அவனுக்கு ரொம்ப நேர மாகவே, சாமியார் கதை கேட்பது ரொம்ப கஷ்டமாகப் பட்டது. இந்த மனநிலையில் இருந்து வெளியே வர, மலையடிவாரம் கட்டாயம் ஒரு அமைதியை தரும் என்று எண்ணினான்.

"ஏங்க இப்ப மேல போகாதீங்க.. கோயில் சாத்தி இருப்பாங்க. வேணு முன்னா, கீழே மாப்பிள்ளைச் சத்திரத் துக்குப் பக்கத்தில் மரத்தடியிலே இருந்துட்டு வாங்க.. காத்து நல்லா வரும்.. அமைதியாக இருக்கும்."

அவன் கிளம்புவது அவளுக்கு வசதியாகவே பட்டது. எனவே அனுப்பி வைத்தாள்.

மலை அப்படி ஒன்னும் பெரிசு இல்லை. வழுக்குப்பாறை போல. மொழு மொழுனு இருக்கும். நடுப்பகுதியில் சமதளமாய் சில இடங்களில் இருக்கும். அங்கு மட்டும் மரங்கள் அடர்ந்து காணப்படும். கீழிருந்து எல்லாப் பக்கத்தி லிருந்தும் ஏறி விட முடியாது. சில வழிகள் தான் உண்டு. ஆனால் சுனையம்மன் கோவிலுக்குப் போற பாதை தவிர வேறு வழியில் யாரும் ஏறுவதில்லை.

சுனையம்மன் கோவில் மலைப் பாதை அடிவாரத்தில், நிறைய மாமரங்கள், முழு நெல்லி மரம், பூமரங்கள் என நிறைய மரங்களுண்டு. நடுநடுவே தென்னைகளும் இருக்கும்.



ஒரு ஓரத்தில் நிறைய வாழை மரங்கள் வைத்திருந்தார்கள். சிறிய நீரோடை மிகச் சரியாக எல்லா மரங்களுக்கும் நீர் போவது போலிருந்தது. மரத்தின் கிளைகள் பரந்து விரிந்து இருப்பதனால், சூரிய ஒளியே இல்லாமல் குகை போன்று இருக்கும். நிறைய படிக்கற்கள் இருக்கும். இதைச் சுற்றியுள்ள நான்கைந்து தெருக்களில் உள்ள பெரியோர்களின் சொர்க்கலோகம் இவ்விடம். குழந்தைகளுக்கும் தான்.

உச்சியில்ஜோதிப்பிழம்பாய்பகலவன் தன் உடலால் ஒளியை உக்கிரப்படுத்திக் கொண்டிருந்தார். கோயில் அடிவாரத்திற்கு முன்னுள்ள நான்கைந்து வீடுகளில் இரண்டு வீட்டிற்கும் நடுவில் உள்ள குறுக்குச் சந்தில் நுழைந்தால், அடிவாரத்திற்குள் எளிமையாய் நுழைந்து விடலாம். இல்லை என்றால், முள்வேலி சுற்றித் தான் வரவேண்டும். அது கொஞ்சம் சுற்று. எனவே, சரவணன் இரண்டு வீட்டிற்கும் நடுவில் உள்ள குறுக்கு சந்தில் நுழைந்தான்.

அடிவாரத்தில் யாருமில்லை. பறவைகள் ஒலி எழுப்பவும் இல்லை.

பலமுறை சரவணன் இங்கு வந்திருந்தாலும், இன்று ஏனோ, இந்த அமானுஷ்யமான ரம்மியமான இடம், அவனுக்கு அந்நியமாகவே இருந்தது. காற்று அவன் உடலுக்குச் சுகம் தந்தாலும், மனம் ஏதோ பாரத்தைச் சுமந்து கொண்டு, முடங்கி இருப்பது போல வெறுமையாய் இருந்தது.

எல்லாவற்றிற்கும், மணி சாமி யாரான கதைதான் காரணமாக இருக்கிறது. இருக்கும் சோகத்தை மதினியின் பேச்சு மனதை இன்னும் அதிகப்படுத்தியது.

“என்ன மாப்பிள்ள... எப்ப வந்தீங்க? பேரன்கள் வந்திருக்காங்களா? கேட்டுக் கொண்டே, சரவணனின் தோளில் கை வைத்தவாறு பின்பக்கத்திலிருந்து வந்து கேட்டார் அந்த முதியவர்.

திடுக்கென்று திரும்பி, ”மாமாவா நான் பயந்தே போயிட்டேன்” என்றான் சரவணன்.

”சுனையம்மன் சன்னதியில் ஏம் மாப்பிள்ளை கலங்குறீங்க? அவள் எல்லார் பயத்தையும் போக்குறவளாச்சே.” சிரித்துக் கொண்டே அருகே அமர்ந்து, அவனைக் கட்டிப் பிடித்துக்கொண்டார்.

அது, அன்பின் நெடிய சுகம்

# துணிவே துணை



- புஷ்பா கிறிஸ்ரி

உலக வாழ்வில் உருவம் கொண்டு
விலக இயலா வாழ்வு வாங்கி
புவியில் வந்து பிறந்தாய் மனிதா
கவியில் உன்னை கனிந்து தொழுவேன்
கொடிய மிருகம் கொல்ல வந்தபோது
மடியின் கல்லால் மரணம் கொடுத்தாய்
சந்திரனை அறிந்திட சாட்சியாய் சென்று
இந்திரன் வியந்திடும் எத்துணை சாதனைகள்
நன்றாகத் துடைக்கும் நல்ல செயல்களும்
என்றுமே துணிவுடன் இயம்பிடும் உன்திறமையை
தூய்மைப் படுத்தித் துடைத்தழித்து நாசம்செய்
தாய்மையாய் உறவுகளின் துயரம் காத்திடு
மனதில் பயமோ மயக்கமோ வேண்டாம்
உனது உயிரை இறைவன் காப்பான்
எமனின் தோல்விக்கு எழுந்து செயற்படு
நமது சமுகத்தின் நலனே உன்பணி

கொண்டதாக இருந்தது சரவணனுக்கு.

எப்பொழுது இவ்வூருக்கு வந்தாலும் இந்த மாமாவைப் பார்க்காமல் போறது இல்ல. ஏன்னா அவருக்கு குடும்பம்னு யாரும் இல்லை. அவர் தனியாள். எப்படி இருந்த குடும்ப அவர் குடும்பம். ஒண்ணும் இல்லாம இப்ப இவர் தனிமரமாக நிற்கிறார். கூலி வேலைகளுக்குப் போவாரு. தானே ஆக்கியும், சில பொழுது கடையில சாப்பிட்டும் பொழுதைக் கழிக்கிறார். எனவே எப்போது வந்தாலும் மாமாவை பார்க்காம அவன் போறதில்லை.

அவருக்கும், என் மேல, என் குடும்ப மேல, ரொம்ப பாசம். உருகிப்போவார்.

"தற்பொழுது எங்கு வேலை" எனக் கேட்ட சரவணனைப் பார்த்து, மாமா மெதுவாகப் புன்முறுவல் செய்தார். முகத்தைத் திருப்பி வைத்துக்கொண்டு அண்ணார்ந்து பார்த்துக்கொண்டே,

"மாப்பிள... சின்ன சின்ன வேலைகளுக்குத் தான் இப்ப என்ன கூப்பிடுறாங்க. முன்ன மாதிரி முரட்டு வேலை களுக்கு எல்லாம் போக முடியல" அவர் குனிந்து அமைதியானார்.

"மாப்பிள்ளை வாழ்க்கை நம்மளை எப்படிபுரட்டிப்போட்டாலும்,அதைவாழாம இருக்க முடியாது. துன்பம் வரும். சோகம் வரும். அது நமக்கான போட்டி. டப்பா உள்ளேயே அடைபட்டு கிடக்கக் கூடாது. நமக்குன்னு கடவுள் ஒவ்வொருவருக்கும் ஒரு பொறுப்பு கொடுத்திருக்கிறார். அதை நிறைவேத்தனும். அது நம்ம கடமை. போயிட்டே இருக்கிற ஆறு ஒருநாளும் தனக்காக நிற்காது."

திராணி குறைய, வேறு ஒரு குரலில் பேசியது போல் பேசிவிட்டு, இன்னும் நெருக்கமாக உட்கார்ந்தார். அந்த நெருக்கம் அவர் சொல்லாமல் விட்டதையும் அவனிடம் கூறியது.

"நம்ம மணியோட தோட்டத்துக்குத் தான்,இப்பநீங்கவேலைக்குப்போறீங்கன்னு என் வீட்டுக்காரி சொன்னா. மணி எப்படி நல்லா வச்சுக்கிறாப்பிலய? ரொம்ப நாளா அவனப் பத்தி ஒரு சந்தேகம் மாமா, அப்பா, அம்மா கிட்ட கூடப் பேசாம, சாமியாரா தெரியுறான்னு எல்லாரும்வருத்தப்பட்டாங்க. தோப்புக்குள்ளே, சொந்தக்காரங்க யாரும் வருவதில்லை, போவதில்லை, அதனால தோட்டத்திலே அவன் நடவடிக்கைகள் எதுவும் இங்கே இருக்கிறவங்களுக்குத் தெரியல. தோட்டத்தில் மணி எப்படி மாமா? எல்லோரையும் போல நல்லா பேசுவானா? சந்தோசமா இருக்கிறானா? எனக் கேள்விகளை அடுக்கி வைத்தான் சரவணன்.

கேள்விகள் அவர் மனதிற்குள் ஏதோ ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. லேசாக நெற்றியைத் தடவிக் கொடுத்தார்.

"மேலேஇருக்கிறாளேசுனையம்மன். அவளுக்குத் தெரியும் எல்லாம். தோட்டத்திலே என்ன நடக்குதுன்னு. நம்ம முன்னாடிப் போறவனுக்குச் செஞ்சா, நமக்கு நம்ம பின்னாடி வர்றவன் செய்வான். இது தான் உலகம். சமநிலை நீதி, அவன் வாழ்ற வாழ்க்கைக்கு, அவன் என்ன பண்ணான்னு யாருக்குத் தெரியும்?"

என்றவாறு தோளில் கிடந்த துண்டை எடுத்து படிக்கட்டின் இடதுபுறம் விரித்தார். மெல்ல உடலைச் சாய்த்து கொண்டே மீண்டும் அவரே பேசத் தொடங்கினார்.

"பசுந்தோல் மாப்பிள வெளில... உள்ள புலிக்கூட்டமே தெரியுது. பணமும் சுகமும் தேடும் புலிகள். புரிஞ்சுக்கங்க மாப்பிள்ளை அவ்வளவுதான்"

அப்படியே, தன் உடலை மெல்ல சாய்த்து தூங்க ஆரம்பித்தார் மாமா.

யாரிடமும் அதிர்ந்து கூட பேசாத மாமா ஏன் இவ்வளவு வார்த்தைகளைக் கடுமையாகப் பேசுகிறார் என்று தெரியவில்லை. எப்பொழுதும் இன்னொருவரைக் குறித்து அவர் இவ்வாறு பேசியதே இல்லை. துன்பப்படும் எல்லா நிலைகளிலும் யாரையும் குறைத்துப் பேசுவதும் இல்லை.

ஆமாம், தோட்டத்தில் அப்படி என்னதான் நடக்கிறது. நடந்து விட்டது. ■

# உணர்வுகளின் கல்லறை

ஆயிரம் ஆசைகள்
அங்கே உறங்கிக் கொண்டிருக்கிறது

பாசப் போரில் ஏமாந்து
பேசமுடியாமல்
உணர்வுகள் தயங்கிக் கொண்டிருக்கிறது

அன்றாடம் அந்தக் கல்லறைக் கதவுகள்
தட்டப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது

ஊன்றி எழுந்து திறப்பதற்கு
உணர்வுகளால் முடிவதில்லை
தாயின் பாசம் அறியாதது
தந்தையின் கோபம் தெரியாதது
கண்ணீர் விடுவதற்கும்
காரணம் காட்ட வேண்டிய வாழ்க்கை

இதயக் கல்லறைக்குள் எத்தனை
உணர்வுகளை அடக்க முடியும்

தனக்குள்ளே சிரித்துக் கொண்டு
தனக்குள்ளே அழுது கொண்டு
உணர்வுகள் மரித்துப் போனது

யாரோ நடந்து போன பாதச்சுவடுகளை
யாருக்கும் தெரியாமல்
பாதுகாக்கும் போராட்டம்

அறுத்து எறிய முடியாத
அழகிய நினைவுகளின்
ஊசலாட்டம்

நம்பிக்கை இழந்து போன
நாளைய நாட்களின் வெள்ளோட்டம்

வியர்வையில் நனைந்த தாள் நாணயங்கள்
வீணாகிய சந்தர்ப்பங்கள்

ஆறுதல் சொல்வதுபோல
அந்த சோகங்களை வாங்கி
ஆயுதமாகப் பயன்படுத்திய உறவுகள்

நல்லதே நினைத்து
நல்லதே செய்த போதும் வந்து
மோதிய பழிப்புரைகள்

என்னடா இந்த வாழ்க்கை
என்று எழும் பெருமூச்சு

நம்பி நம்பி நம்பிக்கையின் மீதே
நம்பிக்கை இன்றி உயிரோடு
புதைக்கப்பட்டு இருக்கிறது உணர்வுகள்

**பெரியமடு நிஹ்ரி**
மன்னார், இலங்கை





# ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் பாலமுனை பாறூக்கின் சிலதடங்கள்

## பேராசிரியர் செ. யோகராசா

**1.0** ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் அறுபதுகளளவில் முற்போக்குக் கவிதைச் செல்நெறி முகிழ்க்க ஆரம்பித்தது, எழுபதுகளிலும் தொடர்ந்தது. இந்த எழுபது காலகட்டத்தில் இடதுசாரிச் சிந்தனையால் ஆகர்ஷிக்கப்பட்டு இத்தகைய கவிதை எழுதியோருள் ஒரு சாரார் குறிப்பாக முஸ்லிம் கவிஞர்கள் இஸ்லாமிய மதப்பற்றுடையவர்களாகவும் விளங்கினர். கீழைத்தேய நாடுகளிலே இது தவிர்க்க வியலாததொன்று என்ற புரிதலின்மையும், இத்தகைய கவிஞர்களின் தொகுப்புகள் வெளிவரத்தாமதமானமையும், வெளிவந்தவைகூட கிடைப்பதற்கரிதாகவிருந்தமையும் காரணமாக ஈழத்துக் கவிதை வரலாற்றில் இடம்பெறத்தவறிய கவிஞர்கள் சிலருள் முக்கியமானவர் பாலமுனை பாறூக்! இவ்விதத்தில் அறியப்படாத ஆரம்பகாலகட்ட (1970-1990) கவிதைகளில் இவரின் முக்கியத்துவம் பற்றியே இங்கு கவனிக்கப்படுகின்றது.

இவரது முற்போக்கு நோக்குடைய கவிதைகளுள் கணிசமானவை சமகால ஈழத்து முற்போக்கு சஞ்சிகைகளான குமரன், தேசாபிமானி, அக்னி, களம், புதுயுகம், புதுக்குரல் முதலானவற்றிலும் தமிழ்நாட்டு செம்மலர், திருப்பம், ஏன் முதலானவற்றிலும் பன்முகப்பரிமாணங்களுடன் வெளிப்பட்டுள்ளன.

கிழக்குமாகாண வித்தகர் விருதினை,கிழக்கு மாகான கல்வி கலாசார அமைச்சர் மற்றும் பணிப்பாளரிடமிருந்துபெறும் தருணம்.



### 1.1.1 கொள்கைப்பிரகடனம்

நாங்கள் புதிய பறவைகள்

"..............
நாங்கள்
இந்தயுகத்தின் ஏற்றத் தாழ்வுகள்
இந்தயுகத்தின் இழிச லொழுக்குகள்
என்பவை கண்டு சினந்தவராதலால்
இந்தப்புவியில் இவற்றையொழிக்க

நடந்தும் ஓடியும்
இன்னும் சொன்னால்
பறந்தே நாங்கள் செயற்படப் போகிறோம்.''

## 1.1.2 சமூகப் பிரச்சினைகள்

### 1.1.2.1 தீர்வு:

அறுவைச் சிகிச்சை

''கறுப்புக் கொடிகளும்
உண்ணாவிரதமும்
பொருத்தமானதா
புதுயுகம் சமைக்க
பருத்த உடம்புகள்
பார்த்து ரசிக்க
கறுப்புக் கொடிகளை
உயர்த்திப் பிடித்து
பசியால் நாமா வாடவும் வேண்டும்?
பிரசவம் ஒன்று நிகழ்வதில் தடையெனில்
அறுவைச் சிகிச்சையே அதற்கு வைத்தியம்''

## 1.1.3 சமூக எழுச்சி

''விழலுக்கு நீரிறைத்து மாய மாட்டோம்
வேதனைகள் தீர்க்காது ஓயமாட்டோம்
விழித்துவிட்டோம், இனியும்நாம்
வழிதவறி வீழ மாட்டோம்
புரியாத புதிரெல்லாம் புரிந்ததாலே
புறப்பட்டோம், ஆகையினால்
சரித்திரத்தை மாற்றிவிடத் தயங்கமாட்டோம்
உலக்கையராய் எமை மதித்து
உதைத்த காலம்
ஓடோடிப் போக
இளங்காலைச் சூரியனாய் எழுந்தே விட்டோம்
இனி இருள்கள் இறந்துவிடும்
வெற்றி காண்போம்
..................''

"பாவேந்தல் பாலமுனை பாறூக் இலக்கியப் பணியில் பொன்விழாக் காணுகின்றார். தமிழ்நெஞ்சத்தின் ஆசிரியர் குழு உறுப்பினர். இலங்கை இந்திய கலை உறவுப் பாலமாக இருப்பவர். இலங்கையில் கலாபூஷண விருது, அரச சாஹித்ய மண்டல விருது,கொடகே சாஹித்ய விருது, கிழக்கு மாகாண வித்தகர் விருது யாழ் இலக்கியப் பேரவை சான்று உட்படப் பல்வேறு விருதுகளையும் சான்றுகளையும் பெற்றவர்.

புலவர்மணி ஆ.மு ஷரிபுத்தீன் ஞாபகார்த்த சர்வதேச மரபுக்கவிதைப் போட்டியிலும் முதலிடம் பெற்றுப் பணப்பரிசுக்குத் தேர்வானவர்.

இலங்கை, இந்திய , மலேசிய இலக்கிய மாநாடுகளில் பங்கேற்பவர்..

வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில் சுடர் ஒளி பத்திரிகைக் குழுமம் இவரின் வாசிப்பு தொடர்பான கவிதையைப் பதாகையாக இலங்கையின் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் காட்சிப் படுத்தியிருப்பது குறிப்பிடத் தக்க விடயம்.

பொன்விழாக்காணும் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களை வாழ்த்துவதில் தமிழ்நெஞ்சம் பெருமிதம் அடைகின்றது. அவரின் பொன்விழா தொடர்பில் இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது."




### 1.1.4 பெண்கள் எழுச்சி

“வெள்ளாமை வட்டைக்குள் வியர்வை
இறைத் திறைத்தே
பொல்லாத போடிக்காய் புழுவாய்த்
துடித் துழைத்தோம்!
உன் அப்பா அவரோடு
உன்னுடைய தாய் நானும்
இன்பம் வருமென்று இணைந்து உழைத்தேனே!
என்னபயன், என்னபயன் ஏதுமிலை எங்களுக்கு
சும்மா இருந்தெவரோ சுகம்காண
நாம் தேய்ந்தோம்!
உண்ண உணவில்லை, ஓம் உனக்குப் பாலில்லை
என்ன பயன்…? இஃதெல்லாம்
எங்கள்விதி யென்றிருந்தோம் !
இந்தவிதி மாற்றிடவும்
இப்போது புதியவிதி
ஒன்று இருப்பதனை உணர்ந்தோம்
சிரி மகளே !
………………..”

ஈழத்து முற்போக்குக் கவிஞர்கள் எவரும் மேற்கூறியவாறு போராட்டத்தில் பெண்களை அழைப்பதாகப் பாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கிழக்கில் நுஃமான்,சண்முகம் சிவலிங்கம், தோழர் இஸ்மாயில் ஆகிய தனித்துவமான முற்போக்குக் கவிஞர் வரிசையில் பாலமுனை பாறூக்குக்கும் முக்கிய இடமுண்டு.

## 1.2 பெண்களின் நிலை

சமகாலக் கவிஞர்களுள் பெண்கள் நிலைபற்றி அதிகளவு சிந்தித்தவராகவும் பாலமுனை பாறூக் வெளிப்படுகின்றார்.

ஈழத்துக் கவிதைகளில் பெண்கள் என்ற தலைப்பிலே (2002) நான் ஆய்வு மேற்கொண்ட போது தி. த. சரவணமுத்துப்பிள்ளை தொடக்கம் வ.ஐ.ச ஜெயபாலன் வரையிலான கவிஞர்களை ஆய்வுக்குட்படுத்தியபோது நுஃமானின் கவிதைகளில் மட்டுமே ‘பெண்கள்» பற்றிய சித்திரிப்பு, யதார்த்தப் பார்வையோடு வெளிப்பட்டிருந்தமை கண்டேன். இப்போது பாலமுனை பாறூக்கும் அப்பட்டியலில் இணைந்து கொள்கின்றார்!

### 1.2.1 சீதனப்பிரச்சினை

“………………
தந்தையிடம் நான்சென்று, தந்தையே ‘நீங்கள் சொன்னபடி சீதனத்தை கொடுத்திடுக,

இன்றேல் என்கணவர் என்னோடு இனிவாழமாட்டார்''
என்றுரைத்தேன் வாப்பாவோ இதயம் மிக நொந்தார்

தந்தையவர் என்னிடத்தில் தங்கைகளைக் காட்டி
என்செய்வேன் என்மகளே
என்செய்வே» னென்றார்
'உன்தங்கை ஐவருக்கும் உடுதுணியும் வாங்க
ஒன்றுமில்லை என்னிடத்தில்» என்று சொல்லி அழுதார்
இந்த நிலை இருக்கயிலே எப்படிப்போய் மச்சான்
இன்னுமின்னும் தந்தையிடம் இதுபற்றிக் கேட்பேன்?
என்னாலே இனிக்கேட்க இயலாது மச்சான்
பொன், பொருளோ கிடையாது பிரியமெனில் வருக»




## 1.2.2 வறுமை நிலை :

...................
''தந்தை தினமும் இருமி, இருமித்
திண்ணையில் படுத்த படுக்கையி லுள்ளார்
தங்கைகள் ஐந்தும் உடுக்க நல்ல
தாவணி கேட்டுத் தினமழு கின்றார்
உன்றன் தாயோ அடுப்பில் பூனை
உறங்கும் நிலையை எண்ணி மாய்கிறாள்
இந்த நிலையில் எதை நீ செய்வாய்
எடுத்தாய் முடிவு ஏற்றதே செல்க!''



அக்கரைப்பற்று பிரதேச
செயலகம் ஒழுங்கு செய்த நிலாக்
கவியரங்கிற்கு தலைமை வகித்தல்.

## 1.2.3. ஆண்களால் ஏமாற்றப்படல்

''.....................
பாத்தும்மாக் கண்ணே! பக்கத்துக் குடிசையிலே
பூத்த இளமலரே! புதுப்பொலிவை இழந்தாயா?
நேற்றுநீ கிணற்றில்
விழுந்திறக்க முனைந்தாயே
காற்றோடு உன்மானம்
கலந்ததெனச் சென்றாயா?
உன்னை முடிப்பேன் என்றுறுதி தந்தவனோ
இன்னோர் இளமலரை
இசைந்தேற்றுக் கொண்டானா?
கண்ணே! காசவனின் கண்களினை மூடியதா?
என்னகொடுமையிது?
ஏமாற்றப்பட்டவள் நீ!''




## 1.2.4 மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லுதல்




எழுவான் கதிர்கள் கவிதை நூல் வெளியீட்டினில் உரைநிகழ்த்துகையில்.. மருதூர்க் கொத்தன், மற்றும் கவிச்சுடர் அன்புமுகையதீன் அமர்ந்துள்ளனர்

"................

அந்த ஊரில் இருந்துவந்து, இங்கே
அலைக் கழிந்து திரிவதுமேன் சொல்லேன்?
களைபிடுங்கி நீ சேர்த்த காசு
கரைந்தே தான் போயிற்றா? ஐயோ,
வெளிநாடு செல்ல வென உன்னை
அழைத்துவந்த ஏஜன்டும் எங்கே!"

மேலேதரப்பட்டகவிதைமத்தியகிழக்குநாடுகாண் பயணத்தின் ஆரம்ப கட்ட பிரச்சினையை, -ஏஜென்சிகளால் ஏமாற்றப்படுவதைப் பற்றி விபரிக்கிறது.

## 1.3 காதல்

### புரிந்துணர்வுக்காதல்

வித்தியாசமானதொரு காதல் உறவின் வெளிப்பாடாக அமையும் கவிதையின் (காதலிக்கு ஒரு கடிதம்) ஒருபகுதி பின்வருமாறு :




"......................
சொன்னபடி நீசெய்தாய்
சுணங்கியும் தானிருந்தாய்
என்னை அடைவதற்காய்
இருவருடம் காத்திருந்தாய்
என்னால் இயலவில்லை
தங்கைகளைக் க ரைசேர்க்க
நல்ல வரன்தேடி
நாயாக நான் அலைந்தும்
விலைவாசி உயர்வேபோல்
மலையாகி, சீதனமும்
உயரத்தில் இருப்பதனால்
ஒன்றும் முடியவில்லை
என்னை அடைவதற்காய்
இருவருடம் காத்திருந்த
அன்பே உனக்கெனது
ஆசிர்வாதங்கள்.."

ஏனையோர் போல் ஏமாற்றிச் செல்லாமல் பொருளாதாரச் சிக்கல் காரணமாக, தனது காதலியைத் திருமணம் செய்யாமல், அவளது திருமணத்திற்கு வாழ்த்துத் தெரிவிக்கிறான் இக்காதலன். வித்தியாசமான யதார்த்த நிலைப்பட்ட காதலைப்பாடிய நுஃமான் போன்ற மிகச் சிலருள் பாலமுனை பாறூக்கும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது!

## 2.1. மத்தியதர வர்க்கம்

படைப்பாளிகளுள் கணிசமானோர் ஆங்கில அரசு உருவாக்கிய மத்தியதர வர்க்கத்தினராகவிருப்பினும் அவ்வர்க்கத்தினரின் தொழில்சார் - குடும்பம்சார் - பிரச்சினைகளை பற்றிச் சிந்திப்பது அரிது. மாறாக, பாலமுனை பாறூக்கின் கவிதைகளில் இவ்விடயமும் வெளிப்பட்டிருக்கிறது! இவர்களது வாழ்க்கையின் நடைமுறைச் சிக்கல்கள் இவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, காரியாலயத்திற்கு நேரத்திற்கு செல்லமுடியாத நிலை, 'சிவப்புக் கோட்டு» பிரச்சினைகள், எவ்வித முன்னேற்றமுமின்றி எழுதுவினைஞனாக நீண்ட காலமிருப்பது முதலான பிரச்சினைகள் சார்ந்த கவிதைகள் பதம் தொகுப்பிலே காணப்படுகின்றன (எ-டு : காரிகையே நீயே சொல், சிவப்புக் கோடு, இன்னும் நீ இலிகிதரா?)

## 2.1.1 வங்கித் தொழில் அனுபவம் :

எழுத்தாளராகவிருக்கின்ற வங்கி அலுவலர் எவரும் தமது அனுபவங்களை வெளிப்படுத்துவதில்லை, மாறானது இக்கவிஞர் நிலை என்பதற்குப் பெண்ணே நீ மறந்துவிடு! என்ற கவிீதை சான்று பகர்கின்றது.

எ-டு

…………………,…..
'இன்னும் கடனை ஏன் தீர்க்கவில்லை'யென
உன்னிடத்தில் கேட்டேன் நான்,
ஓ.. ஏன் அழுதாயோ?
எல்லோரிடத்தும் இயம்புதலைப் போலேதான்
சொல்லிவைத்தேன் உன்னிடமும்
சோகமேன் கொண்டாய் நீ?

தீராப் பிரச்சினைகள் சொல்லியழுது நின்றாய்
உன்னைநான் நோவிக்க ஒருபோதும்
எண்ணவில்லை
என்றன் கடமையிது,
இதனால் உனைக் கேட்டேன்
என்னைநீ தவறாக ஏதும் நினைத்திருந்தால்

பெண்ணே மறந்துவிடு!
பிழைசெய்யவில்லை நான்!!"




## 3 மதப்பற்று


இஸ்லாமிய மதப் பற்றுச் சார்பான கவிதைகளும் பன்முகப் பார்வையோடு வெளிப்படுகின்றன.

(I) மாநபி பெருமை (II) நோன்பின் சிறப்பு (III) ரமலான் பிறை முதலானவை சார்ந்த கவிதைகள் பதம் தொகுதியில் இடம்பெற்றுள்ளனமை இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கது!

## 4. மதப்பற்றும் முற்போக்கும்

இஸ்லாமிய மதப்பற்றும் முற்போக்கும் இணைந்துள்ள கவிதைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகவுள்ளது 'மரணம்» . இதன் ஒருபகுதி பின்வருமாறு அமைகிறது.




"......................
எத்தனையோ மையத்தை
குளிப்பாட்டிக் கபனிட்டு
மையத்துக்கென்றே
மார்க்கத்தில் சொன்ன
அத்தனையும் செய்த
அவர் இன்று மையத்தா?
அல்லாஹ் பெரியவனே,
அனைத்தும் அவன்கையில்!
யாரை எவ்விடத்தில்
என்றவனைக் கேட்பவர் யார்?

மரணத்தை நினையாதோர்
மானிலத்தில் பலருண்டு
முஅத்தினார் மௌத்தானார்!
இந்த உலகிற்கு இவர்
எதையும் சேர்க்கவில்லை
இதனாலே
போடியார் வீட்டு மௌத்திற்கு
வந்ததுபோல்
ஆள்கூடி வரவில்லை
அநேகம்பேர் இருக்கவில்லை
இறைவன் பெரியவன் நீ!
எல்லாம் அறிந்தவன் நீ!
எந்த உலகிற்கு
இவர் சேர்த்து வைத்தாரோ
அந்த உலகில்
அவரை நீ வாழவைப்பாய்
உன்றன் கிருபைக்கே
உளமுருகி நிற்கின்றோம்!"

## 5. போர்க்கால அவலங்கள்

எண்பதுகள் தொடக்கம் முனைப்புறத் தொடங்கிய இப்பொருண் மரபின் வெளிப்பாடுகளும் இவரது கவிதைகளில் தலைநீட்டுகின்றன. அன்றாட வாழ்க்கை போர்க் காலச் சூழலில் எதிர்கொண்ட சிக்கல்கள் கவிதைகளில் இடம்பிடித்துள்ளன.

“.................
வேலைக்கென்று நான்
வெளிக்கிடப் போகிறேன்
போருக் கென்று
புறப் படல் போலது!
அடையாள அட்டை
அதனையும் கொண்டுவா,
தடைகள் பற்பல
தாண்டிட வேண்டுமே!

செல்லும் வழியில்
அதிரடி, எதிரடி
எதிரெதிர் கொள்ளுமோ?
அதிலெதில் பட்டுநாம்
இறையடிசெல்வதோ?
கொண்டுவா இப்படி
கோப்பியை குடிக்கிறேன்
சென்று முடிக்குமோ
செல்கிற வாகனம்?

சாதனை புரிந்த
வீரனாய் நானும்
காரியாலயம்
போய் அடைவேனோ?”



பேராசிரியர் சே .யோகராசா மற்றும் ஏனையோருடன்
பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள்







‘சிவப்புக்கோடு» என்ற கவிதையின் ஒருபகுதியே மேலே தரப்பட்டுள்ளது. இவ்வாறான போக்குடைய அதாவது போர்க்காலம் அன்றாடவாழ்க்கையை எவ்வாறெல்லாம் பாதித்தது என்பதான நோக்கில் எழுதப்பட்ட கவிதைகள் கிழக்கிலே குறைவாக வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## 6. இனி இதுவரை கூறப்பட்டவாறமைந்த பொருள் மரபுசார்ந்த கவிதைகளின் வெளிப்பாட்டு முறைபற்றியும் சில கூறவேண்டும்

அவையாவன.




காயல்பட்டணத்தில் இடம்பெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் ஊடகம் எனும் தலைப்பில் கவிதை வாசித்த பின் இலக்கிய அதிதிகளோடு...

**6.1** ஈழத்தில் புதுக்கவிதை, தமிழக "எழுத்து" ஊடாக அறுபதுகளில் ஆரம்பித்தாலும் 'வானம்பாடி» ஊடாகவே ஈழத்துக் கவிஞர்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இத்தகைய வானம்பாடிக் கவிஞர்களே முற்போக்கு நோக்குடைய புதுக்கவிதைகளை முதன்முதல் எழுத ஆரம்பித்தாலும் இத்தகைய கவிஞர்கள் பலரின் கவிதைகளில் குறைபாடுகள் சில - உதாரணமாக, கோஷங்கள், மலினமான சொற்பிரயோகங்கள், அந்நியமான படிமங்கள், குறியீடுகள், அநாவசியமான வடமொழிப்பிரயோகங்கள், மனோரதியப்பாங்கு, முதலியன வெளிப்பட்டிருந்தன. ஈழத்துக் கவிஞர்களிடம் இவ்வழிச் செல்வாக்குகள் வெளிப்பட்ட சூழலில் வ.ஐ.ச ஜெயபாலன், சு.வில்வரத்தினம், சிவசேகரம் முதலான சிலரே தரமான கவிதைகளை எழுதுகின்றனர் இவ்வரிசையில் இப்போது பாலமுனை பாறூக்கும் இணைந்து கொள்கின்றார்

**6.2** படர்க்கை நிலையை இயன்றளவு தவிர்த்து, தன்மை இடத்திலும் பாத்திரங்களின் கூற்றாகவும் யதார்த்தமான சம்பவங்கள், குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் முதலானவற்றை அடித்தளமாகக் கொண்டும் இவரெழுதியமை காரணமாக ஏனைய பெரும்பாலான கவிஞர்களது கவிதைகளில் காணப்பட்ட சில குறைபாடுகள் இவரது கவிதைகளில் பெருமளவு காணப்படாமையும் கவனத்திற்குரியது.

**7.** தொகுத்துக் கூறுவதாயின் பாலமுனை பாறூக்கின் ஆரம்ப காலகட்ட கவிதைப்போக்குகளாக இதுவரைகூறப்பட்ட பல்வேறு விடயங்களும் சமகாலக் கவிஞர்கள் பலரது கவிதைப் போக்குகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டனவாகவிருப்பது புலப்படுகிறது. இவ்விதத்தில் அறுபதுகளின் பிற்பட்ட காலந்தொடக்கம் எண்பதுகளின் முடிவுவரையான காலகட்ட ஈழத்துக் கவிதை வரலாற்றில் இவரது கவிதைகளினூடாக இவருக்குரிய இடம் மறுக்கப்படமுடியாததாகின்றது. பதம் என்ற ஒரு தொகுப்பை

மட்டும் வைத்து இதுபற்றி கூறமுடியுமா என்று வாசகர்கள் கேட்கக்கூடும். அதற்கு இருவிடைகள் உள்ளன.

(I) பதம் என்ற தொகுப்பின் தலைப்புப் பற்றி ஆழமாகச் சிந்தித்துப்பார்த்தல்.
(II) பின்னர் வெளிவருகின்ற நவீன காவியங்கள், குறும்பாக்கள், ஹைக்கூக்கள் ஆகியவற்றிலும் மேற்குறிப்பிட்ட சிறப்புக்கள் வேவ்வேறு நோக்கிலும், போக்கிலும் வெளிப்படுவதை அவதானித்தல்.

ஆயினும் இவரது பிற்காலக் கவிதைப் பயணம் தடம் மாறாதிருந்திருப்பின் மேற்கூறிய விதங்களில் முக்கியமான கவிஞராகத் திகழ்ந் திருப்பார் என்பதில் ஐயமில்லை. (எனினும் இவரது புதிய தடங்களும் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் இன்னுமொரு முக்கிய பங்களிப்பினைக் காட்டுகின்றதென்பதைக் கூறாமலிருக்க முடியாது)

**8.** இறுதியாக இன்னொன்று - பாலமுனை பாறூக் கவிதைத்துறையில் ஈடுபட்டதற்கப்பால் தொகுப்பாளராக (மற்றவர் அன்புமுகையதீன்) தொகுத்த எழுவான்கதிர்கள் (1986) என்ற -எம்.எச். எம் அஷ்ரப் தொடக்கம் சித்தி ஜெரீனா கரீம் - வரையில் இருபத்தினாலு கவிஞர்களது கவிதைகள் கொண்ட தொகுப்பின் வரவும் கவனத்திற்குரியது. இத் தொகுப்பிலுள்ள இளங்கவிஞர்கள் சிலர் இத்தொகுப்பின் ஊக்கத்தினால் தொடர்ந்து எழுதிவந்தமையும் வேறு சிலர் இத்தொகுப்புடன் மட்டும் தம்மை ஈழத்து நவீன கவிதை வரலாற்றில் நிலை நிறுத்திக் கொண்டமையும் மனங்கொள்ளப்படவேண்டியன. கவிதைத் தேர்வில் அன்புமுகையதீனுக்கு மட்டுமன்றி பாலமுனை பாறூக்கிற்கும் சமமான இடமுண்டு என்று கூறுவதில் தவறில்லை என்றே கருதுகின்றேன்! ■



கவிஞர் தமிழன்பன் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற ஊடகம் எனும் தலைப்பிலான கவியரங்கில்...


கலாபூஷணம் யூ. எல். ஆதம்வாவா அவர்களின் மறைவை யொட்டி இரங்கல் பா படித்தபோது...


யாழ் இலக்கிய பேரலை தோட்டுப் பாய் மூத்தம்மாவுக்கு வழங்கிய சிறப்பு சான்றிதழை டான் **TV** குழும அதிபரிடமிருந்து பெற்றபோது...



தோட்டுப் பாய்மூத்தம்மாவுக்கான அரச சாஹித்ய மண்டல விருதை கலாசார அமைச்சரிடமிருந்து பெற்ற போது..

# வாடுமுன் வாடுகிறேன்!

ஆடம்பர விளக்குகள்.. அலங்கார வடிவங்கள்..
ஊடக விளம்பரங்கள்.. உருவ பொம்மைகள்..
மெழுகு தடவி மெருகேற்றிய காய்கனிகள்..
இழுவைக் கதவுகள்.. ஏற்றிவிடும் படிகள்..
என்றோ பறித்த காய்கனிகள் குளிரூட்டலில்!
நன்றாய்ப் பளபளக்கும் நலத்திற்கோ கேடது வாம்!
பேரம் ஏதும் பேசாமல் செலுத்துகிறீர் பணத்தை!
மக்களே என்னைக் கொஞ்சம் பாருங்கள்!
அக்கறையாய் அன்றன்று பறித்து
வாடுமுன் விற்றிட வாடுகிறேன்!
ஓடுகிற வயதில்லை ஒடுங்கிய கிழவிநான் !
பார்க்காமல் செல்வீர்கள் பார்த்தாலும்
பாதிக்குப் பாதி பேரம் பேசிடுவீர்!
பிழைக்கவும் வழியின்றிப்
பேதையாய் எம்வாழ்வு...!

**ஓசூர் மணிமேகலை**





Dr. ஃபஜிலா ஆசாத்

(International Life Coach - Mentor - Facilitator)

# சில நேரம்...

**நீ** யார்?

இந்தக் கேள்வியை வேறு யாராவது கேட்டால் சட்டென்று அதற்கு பதில் சொல்லி விடுவீர்கள். ஆனால் உங்களுக்குள் அவ்வப்போது எழும் இந்தக் கேள்விக்கு உங்களால் பதில் தர முடியாமல் பெரும்பாலும் தவிப்பீர்கள்.

உங்களுக்குத் தெரியும்... தான் யார் என்பதை அறியக் கூடிய ஒருவரால் தான் தன் விருப்பம் என்ன, தன் பார்வை எங்கு நிலை கொள்கிறது என வரையறுக்க முடியும். தன் விருப்பம் அறிந்த ஒருவரால் எந்த சூழலிலும் எதையும் துளைத்து எழ முடியும். எந்த பிரச்சினை வந்தாலும் அதில் முடங்கிப் போகாமல் தீர்வை நோக்கிய பார்வையுடன் வாழ்க்கையை மகிழ்ச்சியாக கொண்டு செலுத்த முடியும்.

தவிர, நீங்கள் யார் என்ற அலசல், உங்கள் பலம் என்ன, உங்கள் பலவீனம் என்ன, எது உங்களுக்கு வசப்படுகிறது, எதை நீங்கள் வசப்படுத்த துடிக்கிறீர்கள், உங்கள் கால்கள் எதை நோக்கி செல்ல விரைகிறது என உங்களுக்குள் ஒரு தெளிந்த பார்வையைத் தரும்.

ஆனால் நீங்கள் யார் என்ற கேள்வி ஒன்றாக இருந்தாலும் பதில் ஒவ்வொரு மணித் துளிக்கும் உங்களுக்குள் மாறிக் கொண்டே இருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்களா..?!

சில நேரம் எனக்கு இது வேண்டும்... இது கிடைத்தால் தான் என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என ஏதோ ஒன்றைக் குறி வைத்து உங்களுக்குள் ஒரு அடாவடிக் குழந்தை வீறிட்டு அழும். சில நேரம், காசு, பணம் எதுவும் பெரிதல்ல. எனக்கு நிம்மதியாக, உறவுகளின் பிணைப்பில், நட்பின் பிடிப்பில், மகிழ்ச்சியாக இருந்தால் போதும், என எவ்வளவு வசதியாக இருந்தாலும், கேட்டதெல்லாம் கிடைக்கக் கூடிய சூழல் இருந்தாலும், உங்கள் மனம் ஒரு செல்லக் குழந்தையாக அன்புக்கு ஏங்கும்.

ஒரு புதிர் மனதில் நிலை கொள்ள, தான் எவ்வளவு படித்திருந்தாலும், நல்ல பதவியும், பேரும் புகழும் கிடைத்திருந்தாலும், தன்னை சுற்றி என்ன நடக்கிறது என்று ஒன்றும் பிடிபடாமல் சில நேரம் மனம் பேதலித்து மருகும். எவ்வளவு பெரிய கூட்டம் தன்னை சுற்றி நிறைந்திருந்தாலும் தனக்காக யாராவது இருக்கிறார்களா என சில நேரம் மனம் உற்று நோக்கித் தேடும்.

சில நேரம் எந்த சூழலிலும் தவிக்காமல் தயங்காமல், விவேகமாக காய் நகர்த்துவது இலாகவமாய் கை கூடும். சில நேரம் எதையும் புரிந்து கொள்ள முயற்சிக்காத கோபம் முன் நிற்கும். ஆற்றாமை எட்டிப் பார்க்கும். நிகழும்



# அவள் அழகி இல்லை...

சின்ன
கிள்ளுகளிலே கொதித்துவிடும்
வெளிர் மேனி? - இல்லை!

தொடை தாண்டும்
நீலகருமுடி? - இல்லை!

பட்டென
பேசிவிடும் சிரிப்பு? - இல்லை!

அட,
கூர்மையான மூக்கு?
- அதுவும் இல்லை!

வியர்வை
வாசத்துடன் உள்நுழைந்த
அப்பா,
' ராஜா எங்க இருக்கீங்க? ' என்று
கேட்டுக் கொண்டே நுழைந்தார்!

அவள் எப்போதோ
நீங்கள் சொல்லும்
அழகியல் குறியீடுகளைக்
மீறிவிட்டாள்!
அவள் அழகிகளைக் கடந்த
அழகு!

இளவரசியே ராஜாவாகும் ஆட்சியில்,
இந்த அழகிங்க எல்லாம்
எம்மாத்திரம்!..

- சுஜித்ரா வீ ர,
செஞ்சி.

ஆட்டத்தை முடித்து விடலாம் என அசுர வேகத்தில் மனம் பரபரக்கும்.

சில நேரம் எனக்கு யாரும் உதவ மாட்டார்களா என இயலாமையில் தவிக்கும் அதே மனம் சில நேரம் எனக்கு யாருடைய தயவும் தேவை இல்லை நானே என்னை முன்னேற்றிக் கொண்டு பிறருக்கும் உதவியாக இருப்பேன் என உங்கள் தன்னம்பிக்கையை தலை நிமிர செய்யும்.

இப்படி அவ்வப்போது வெவ்வேறு விதமாக எட்டிப் பார்க்கும் இந்தக் குண நலன்களில் நீங்கள் யார் என்று வகைப் படுத்த முடியாமல் பல நேரம் திணறி இருப்பீர்கள்.

இந்த குணங்கள் எல்லாமும் சேர்ந்தது தான் நீங்கள் என்பதை நீங்கள் உணரும்வரை, இதில் எது 'நான்' என்று ஏதோ ஒன்றில் உங்களை அடையாளப் படுத்தும் முயற்சியில், உங்கள் மனம் அலைபாய்ந்து கொண்டே இருக்கும்.

ஆனால், உங்களுக்கு ஒன்று தெரியுமா.. உண்மையில் பலதரப் பட்ட உணர்வுகளும் நிறைந்தவன் தான் மனிதன். ஒரே ஒரு நாள் உங்கள் உணர்ச்சிகளையும் செய்கைகளையும் நீங்கள் எழுதிப் பார்த் தால், அது எவ்வளவு மேலும் கீழுமாக இருக்கிறது, இப்படித்தான், இது தான் நான் என உங்களை ஒரு வட்டத்திற்குள் கொண்டு வர முடியாததாக இருக்கிறது என நீங்களே புரிந்து கொள்வீர்கள்.

அப்படி உங்களை நீங்களே புரிந்து கொள்ளும் போது, மற்றவர்களையும் "இவர்கள் இப்படித் தான்.." என முத்திரை குத்தி தள்ளி வைக்காமல் உங்களால் ஏற்றுக் கொள்ள முடியும். மனம் பக்குவப்பட்டதாக எந்த சூழலையும் தாண்டிச் செல்லும்.

ஊருக்கு ஒதுக்குப் புறத்தில் இருக்கும் தன் பாட்டியை பார்க்க வந்த அந்த இளைஞனின் முகம் மிகவும் வாடிப்போய் இருந்தது. பாட்டி கேட்ட இயல்பான கேள்விக்கெல்லாம் ரொம்ப அசிரத்தையாகவே பதில் சொன்ன அவன்,

ஏதோ ஒரு பிரச்சினையில் தவிக்கிறான். அவன் மனம் ஏதையோ ஏற்றுக் கொள்ள மறுத்து, தனிமையை நாடி அங்கு வந்திருக்கிறான் என அந்த அனுபவம் மிக்க பாட்டியால் புரிந்து கொள்ள முடிகிறது.

அவனை ஆதரவாக அணுகி, அன்போடு கவனிக்கும் பாட்டியிடம் அவன் மனம் விட்டு பேசுகிறான். தன் நண்பர்களை நம்ப முடியவில்லை என்றும் ஒரு நேரம் சிரித்துப் பேசுபவர்கள், பல நேரம் கிண்டல் செய்கிறார்கள் என்றும் ஒரு நேரம் ஓடி வந்து உதவி செய்பவர்கள், பல நேரம் கண்டு கொள்ளாமல் இருந்து விடுகிறார்கள் என்றும் சொல்லி வருந்துகிறான்.

மற்றவர்களை புரிந்து கொள்ள முடியாமல்தனக்குமிகவும்மனஉளைச்சலாக இருக்கிறது. நன்றாக பேசக் கூடியவர்கள் ஏன் திடீரென்று பேசாமல் இருக்கிறார்கள், தான் ஏதோ தவறு செய்து விட்டோமோ என மனம் சங்கடப் படுகிறது எனப் பலவாறு புலம்புகிறான்.

அமைதியாக அவன் கூறுவதை கேட்டுக் கொண்டிருந்த பாட்டி, அவன் பேசி முடித்ததும்எதுவும்சொல்லாமல்ஓய்வெடுக்க சொல்லி அனுப்புகிறார். சற்று இளைப்பாறி விட்டு வந்த அவனிடம் அவனுக்குப் பிடித்த பிரியாணி செய்திருப்பதாக சொல்லி சாப்பிட அழைக்கிறார். ஆசையோடு மூடியைத் திறந்து பார்க்கும் அவனுக்கு அங்கு உணவு இல்லாமல் சில பாத்திரங்களில் ஒன்றில் அரிசியும், ஒன்றில் உப்பும், ஒன்றில் மிளகாயும், ஒன்றில் காய் கறியும் என பிரியாணி செய்வதற்கான மூலப் பொருட்கள் மட்டும் மூடி வைக்கப்பட்டிருக்கிறது கண்டு வியப்பாக இருக்கிறது.

பசி வயிற்றைக் கிள்ள.. உனக்கு பிடித்த பிரியாணி.. சாப்பிட வா.. என அன்போடு அழைத்து, வெறும் வேக வைக்காத அரிசியைக் காட்டும் பாட்டியின் இந்த செயலை புரிந்து கொள்ள முடியாமல் ஏமாற்றமும் கோபமாக பாட்டியை பார்க்க, அந்த பாட்டி, 'ஏன் கோபப்படுகிறாய்' என்று கேட்கிறார். 'பிரியாணி என்று சொல்லி விட்டு நீங்கள் வைத்திருப்பதை பார்த்து கோபப் படாமல் எப்படி இருக்க முடியும். இந்தப் பொருட்களை கலந்து சமைத்தால்தானே பிரியாணி ஆகும்' என்று கேட்கிறான்.

அதைக் கேட்டு சிரித்த பாட்டி 'இப்படி பல தரப்பட்ட பொருட்களை சேர்த்து சமைத்தால்தான் பிரியாணி ஆகும் என்று தெரிந்த உனக்கு நீ கூறியது போன்ற பல்வேறு குணங்களும் சேர்ந்து இருப்பவன் தான் ஒரு மனிதன் என்பது புரியாமல் போனது ஏன் என்று கேட்கும் அவர் ஒரு ஓரமாக மறைத்து வைத்திருந்த பிரியாணியை எடுத்து வைத்து அவனை அன்போடு உண்ண சொல்கிறார்.

எல்லாவிதமான குணங்களும் சேர்ந்தவர்கள் தான் மனிதர்கள். அவர்களை ஒவ்வொரு குணமாக அலசிப் பார்க்காமல், அவர்களை தான் எதிர்பார்க்கும் ஏதாவது ஒரு குணத்தால் அடையாளப் படுத்த முயலாமல், அவர்களை எல்லாமும் சேர்ந்தவர்களாக, மொத்தமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது அந்தக் கணம் அவனுக்கு புரிகிறது.

ஒருவருடைய செயல், உங்களைப் பற்றி அவர்களுடைய கணிப்பு என்ன என்பதையோ, அவர்களைப் பற்றிய உங்கள் கணிப்பு என்ன என்பதையோ மட்டும் சார்ந்தது அல்ல. அது பெரும்பாலும் ஒருவருடைய அந்த நேர மனநிலையையும் உடல் நிலையையும், சூழலையும் சார்ந்துள்ளது. உண்மையில் அவர்கள் அந்த நேரத்தில் அவர்களுக்கு எப்படி இருக்க முடிகிறதோ அப்படியே இருக்கிறார்கள். அதனால் அது சூழலுக்கேற்ப மாறிக் கொண்டே இருக்கிறது.

இதனை புரிந்து கொண்டால் நாம் மற்றவர்களுடைய ஒவ்வொரு செய்கையையும் நம்மோடு தொடர்பு படுத்தி பார்த்து வருந்த மாட்டோம். நம் உறவுகளும் தழைக்கும் நிம்மதி நிலைக்கும்.

■



# கண்ணதாசனுக்குப் புகழ்வணக்கம்

காவியத் தாயின் கவிமைந்தன் - இளங்
காதல் கன்னியரின் கவியழகன்
ஓவியப் பாவையின் ஒளிவேந்தன் - நீர்
ஒழுகும் சொல்லெலாம் ஓர்ராகம்
ஆழி சூழ்ந்த இவ்வுலகை- கவி
வேலி வேய்ந்த வெண்பாவே....!

காரிகையின் கவித்தூரிகையே - நீர்
பேரிகையின் இசைப்பேரொலியே
சந்தங்களின் அழகிய ஆலாபனையே - கவிப்
பந்தங்களின் இசை ஆசானே... !
எண்ணங்களின் ஊடாடும் வசந்தமே - நீர்
வண்ணங்களில் பேசிடும் வானவில்லே...

கண்ணனின் தாசனே... கவியரசே - அழகிய
கன்னியர்க்கும் தாசன் நீயல்லவா....!
உன் விரல்விடுத்த தூரிகையில் - இங்கு
நிரல்பட்டு சுமக்கும் பாயிரங்கள் ஆயிரம்
பெரியாரையும் உமக்குத் தெரியும் - குள்ள
நரியாரையும் உமக்குத் தெரியும்
நிகழ்கால பூதக் கண்ணாடி_நீயோ
இளங்கவிகளின் பாதக் கண்ணாடி...!!

**முனைவர்.சே.பத்மினிபாலா**

# ஹைக்கூ

*
மகனின் தற்பெருமை
பேசுகிறாள் தாயொருத்தி!
முதியோர் இல்லத்திலமர்ந்தபடி...!

*
இரவுநேர காவலாளி!
கடைவாசலில் படுத்துறங்கும்
பிச்சைக்காரன்...!

*
உயிரையும் கொடுக்கிறான்
உயிரையும் எடுக்கிறான்
மனிதனும் கடவுளோ...!

*
நாமம் போட்டுவிட்டார்கள்!
கடன் வாங்கிய
பெருமாள் பக்தர்கள்...!

*
ஆண்களுக்கு ஞானம்
தரும் போதிமரம்...!
"பெண்"!

*
உடலே மூலதனம்!
எப்பொழுது வேண்டுமானாலும்
செய்யலாம் பாலியல்தொழில்!

*
வீட்டுக்குத்தூரமாம்!
மாதத்திலோருநாள் நிலா
அமாவாசை..!

**மகிழை. சிவகார்த்தி,**
புறத்தாக்குடி,



# மன்னர் மன்னன் இரங்கல் பா

கண்ணிலும் கருத்திலும்
காட்சியாய்ப் பாவேந்தர்
காண்பதுபோல் நெடிய உயர் தோற்றம் – நம்
கண்முன்னே மன்னர் மன்னன்
கருத்திலே நிறைந்திருந்தார்
காலமும் இதுசொல்லும் ஏற்றம்.

எண்ணிலா அரங்குகள்
இவர் ஏறி முழங்கினார்
எல்லாமும் தந்தைபுகழ் பேசும் – அவர்
எழுத்திலும் இத்தன்மை
இயல்பாக நிறைந்திடும்
எப்போதும் தமிழ்மணமே வீசும்.

மண்ணிலே எச்சமாய்
மக்களே விளங்குவர்
மறையுரை சொல்வது உண்மை – என
மாறாமல் நிலைநாட்டி
மகிழ்வுடன் வாழ்ந்திட்டார்
மன்னர் மன்னன் நெஞ்ச உயர்தன்மை

சென்னையும் புதுச்சேரி
சீர்மக்கள் தமிழகம்
தன்னையும் தாண்டியே திகழ்ந்தார் – இத்
தலைமுறை முழுவதும்
கலைபெற ஒன்றியே
காட்டினார் ஒன்றிணைந்து வாழ்ந்தார்.

அன்னவர் மறைவிலே
அனைவரும் வருந்துகிறோம்
அதுவும் நம் பாவேந்தர் சிறப்பு – நாம்
அகத்திலே ஏற்றதன்
அணிநலன் ஆகுமே
அருந்தமிழர் நினைவெல்லாம் இருப்பு.

மன்னர் மன்னன் மறைவுக்கு
மனம் நிறைந்த இரங்கலை
இன்னாளில் தெரிவித்துக் கொள்வோம் – அவர்
மதிப்புறு குடும்பத்தின்
துயரினில் பங்கேற்போம்
மனம் அமைதி பெற்றிடவே வேண்டுவோம்.



தந்தை
பாரதிதாசன்

மகன்
மன்னர் மன்னன்



ஆழ்ந்த இரங்கலுடன்
**தகவல் முத்துக்கள் இதழ்க்குழுமம், மாலை இலக்கிய வட்டம் நீர்முளை,**
திருக்குவளை வட்டம், நாகை மாவட்டம்
இவர்களுடன், தமிழ்நெஞ்சம் - பிரான்சு

நான் அந்த வீட்டிற்கு புதிதாய் குடிபோன அன்றே கவனித்தேன் என் எதிர் வீட்டில் குடியிருந்த அவர்கள் இருவரையும்...

அவர்கள் ஆத்மார்த்தமான தம்பதி களாய் எனக்குத் தெரிந்தார்கள். அட இவ்வளவு ஒற்றுமையாய் இருக்க முடியுமா? என யாரும் பொறாமைப்படக்கூடும் அவர்களைப் பார்த்தால், அவ்வளவு அந்நியோன்யம் அவர்கள் இருவருக் குள்ளும்.

பெரும்பாலும் அவர்கள் எங்கு சென்றாலும் ஒன்றாகவே கைகோர்த்தபடி சென்று வந்தார்கள்.

அவர்களில் ஒருவரை விட்டு மற்றொருவரை நான் பார்த்ததே இல்லை .

அவர்கள் இருவருக்கும் தனித் தனியே உணவு உண்ண இரண்டு தட்டுகள் இருந்தாலும் பெரும்பாலும் ஒரு தட்டில் இருக்கும் உணவை உண்ணும் பழக்கத்தையே கொண்டிருந்தார்கள்.

அவர்களைப் பார்த்துப் பழகிய சிலநாட்களிலேயே அறிந்து கொண்டேன் அவர்களுக்கு அவர்களைத் தவிர புற உலகைப் பற்றிய கவலை ஒருநாளும் இருந்ததேயில்லை என்று.



# அவனும், அவளும்

இனியவன் காளிதாஸ்

வீதியில் பலர் இருந்தாலும் ,அவர்கள் ஒருவருக்கொருவர் ஓடிப்பிடித்து விளை யாடுவது கொஞ்சுவது, கெஞ்சுவது என யாரைப் பற்றியும் கவலையில்லாமலே இருப்பார்கள் .

இப்படியாய் நகர்ந்து கொண்டிருந்த நாட்களில் என் அலுவல் பணியாக நான் இரு நாட்கள் வெளியூர் சென்று வீடு திரும்பினேன்

நிலவொளி வீசிக்கொண்டிருந்த அந்த முன்னிரவுப் பொழுதில் நான் இதுவரையில் காணாத காட்சியை முதன் முறையாய்க் கண்டேன்.

அவள் மட்டும் தனியாகப் படுத் திருந்தாள் எதிர் வீட்டில் இலைக ளுதிர்த்திருந்த ஒரு மரத்தினடியில்.

அவள் கண்களில் ஏதோ ஒரு வலியும், விரக்தியும் வேதனையும் இருந்ததை என்னால் உணர முடிந்தது.

என்னாச்சு இப்படி தனியா இருக்காளே... இருவருக்குள்ளும் ஏதே னும் பிரச்சினையோ என எண்ணிக் கொண்டிருந்த வேளையில் அப்பா என அழைத்தவாறே ஓடி வந்தான் என் மகன் மகிழ் .

உங்களுக்குத் தெரியுமாப்பா? என்றான் .

தம்பி ஒரு நிமிடம் என்ற நான்... எதிர்வீட்டைக் காட்டி "ஆமா எதிர்வீட்டுல தனியா படுத்திருக்காளே" என்றேன்.

அதத்தான்பா...சொல்ல வந்தேன். இங்க வாங்க என்று என்னை அழைத்துக்கொண்டு அவள் படுத்திருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றான் .

அவள் படுத்திருந்த இடம் சற்றே மேடாகவும், சற்று முன்னைக்கெல்லாம் குழிதோண்டி பின் மூடியது போலும் இருந்தது.

அவளை நெருங்க,நெருங்கத்தான் நான் கவனித்தேன். அவள் கண்களில் தாரை, தாரையாய் நீர் வடிந்து கொண்டிருந்தது.

அதைக் கண்டதும் ஏதோ ஒரு இனம்புரியா சோகம் என்னைக் கவ்வத் தொடங்கியிருந்தது.

## ஹைக்கூ

எத்தனை முறைதான்
புரட்டி புரட்டி பார்ப்பாரோ
ஜாதகத்தை சோதிடர்

நேற்றையை விட
இன்று எவ்வளவோ பரவாயில்லை
நேரத்தில் எழுந்தேன்

அழைப்புமணி கேட்டு
அலறிகொண்டு எழுந்தது
நாய் குட்டி

இயற்கை
பாடம் நடத்தும் வகுப்பறை
சற்று குளிர்ச்சியாக

செம்மண்
கவிதை வாசிக்கும் போது
மண் மனம்

கைகளை பிடித்துக்கொண்டு
நீண்ட நேரமாக பேசுகிறார்கள்
காதலர்கள்

நேற்று விட்ட இடத்தில்
இன்று ஆரம்பமானது
காதலர்கள் சண்டை

ஓய்வு ஊதியம்
வாங்கி கொண்டிருக்கும் போது
காதலியின் ஞாபகம்.

**கவிஞர் மீன் கொடி பாண்டிய ராஜ்**
திருப்பூர்

அவளைக் கண்ட நான்... "சிட்டு... சிட்டு... சிட்டு உனக்கு என்னாச்சு" (சிட்டு என்பதுதான் அவளின் பெயர்) என்று கம்மிய குரலில் கேட்டேன்.

என்னை சற்றே தலை உயர்த்திப் பார்த்த சிட்டு, பின் சலனமேயில்லாமல் அதே இடத்தில் படுத்துக்கொண்டாள்.

கிட்டத்தட்ட உறைந்துபோய் சிட்டு வையே பார்த்துக் கொண்டிருந்த என்னை "அப்பா" எனும் மகிழின் குரல் என்னை நிஜ உலகுக்குக் கொண்டு வந்தது.

“நீங்க ஊருக்குப் போன அன்னைக்கு அவன் ஒரு செத்துப்போன எலிய சாப்டானாம்ப்பா, அந்த எலிக்கு யாரோ எலிமருந்து வச்சு கொன்னுருக்காங்க அத சாப்படதால... அவனும்... அவனும்... ‘டாமி’ யும் கொஞ்ச நேரத்தில சுருண்டு விழுந்து இறந்துட்டான் பா” (டாமி என்பது செல்லப் பெயர்)

“அதுல இருந்து ‘சிட்டு’ சாப்பிடவே இல்லபா... டாமி கூடவே படுத்துட்டிருந்துச்சு. டாமிய இதோ இப்ப சிட்டு படுத்துட்டிருக்காளே... அதே இடத்துல தான் புதைச்சாங்க பா...

டாமி இறந்தது கூடசிட்டுவுக்குத் தெரியலபா... இறந்துபோன டாமியோட உடல சிட்டு எடுக்கவே விடல...

டாமி பக்கத்துல யார் வந்தாலும் அவங்கள கடிக்கப் பார்த்துச்சு. கடைசியா சிட்டுவ கட்டி வச்சிட்டு தான் டாமியோட உடம்ப இந்த இடத்துல புதைச்சாங்க. அப்ப இருந்து சிட்டு ரொம்ப சத்தமா கத்திக்கிட்டே இருந்துச்சு... சதா அங்கயும், இங்கயும் ஓடிக்கிட்டே இருந்துச்சு... அமைதியாவே இல்லபா...

ஒரு நாள் முழுக்க கத்திட்டு இங்க வந்து படுத்தவ தான் அதுக்குப் பின்னாடி கத்தவும் இல்ல, சாப்பிடவும் இல்ல. இதுவரைக்கும் ஒரு வாய் சாப்பாடு கூட சாப்பிடல பா...” கிட்டத்தட்ட அழும் குரலில் சொல்லி முடித்தான் மகிழ்.

எனக்கு என் அடிநெஞ்சை யாரோ பிடித்து அழுத்துவதுபோல இருந்தது. ஏதோ என்னோடே பயணப்பட்டு என் உணர்வுகளையெல்லாம் பகிர்ந்து கொண்ட என் பால்ய கால நண்பனை இழந்தது போலிருந்தது.

“சிட்டு” என மீண்டும் அழைத்தேன் நான்... சற்றும் சலனமில்லை அவளிடம்.

சிட்டுவுக்கும், டாமிக்கும் மீன் குழம்பு என்றால் மிகவும் பிடிக்கும் என என் நினைவுக்கு வந்தது.

நல்லவேளையாய் அன்று வீட்டில் மீன்குழம்பு வீட்டுக்குள் ஓடிச்சென்று சோற்றோடு மீன்குழம்பைப் பிசைத்தெடுத்து சிட்டுவின் தட்டில் போட்டு வைத்து சிட்டுவின் வாய்க்கருகில் தட்டினை நகர்த்தி வைத்தேன்.

எழுந்து கொண்ட சிட்டு டாமியின் தலை புதைக்கப்பட்ட அந்த இடம் நோக்கி தட்டினை நகர்த்திப் பின் படுத்துக் கொண்டது

அன்று இரவு முழுவதும் எனக்கு



உறக்கம் வரவேயில்லை. சிட்டுவும், டாமியும் எப்படியிருந்தார்கள்...

மற்ற எல்லோரையும் பொறுத்த வரையில்...அவர்கள் இருவரும் வெறும் இரு நாய்க குட்டிகளாகத் தெரிந்திருப்பார்கள்.

ஆனால் என் கண்களுக்கு உண்மையில் அவர்கள் ஆத்மார்த்தமான தம்பதிகளாக அல்லவா தெரிந்தார்கள்.

பிரிவு என்பது எவ்வளவு கொடுமை... டாமியைப் பிரிந்து சிட்டு இனி எப்படி வாழப்போகிறது? என்ற கேள்விகளோடு கழிந்தது அந்த இரவு.

நீண்ட இரவின் முடிவில் தொடங்கிய அடுத்த நாள் அதிகாலையில் சிட்டு என்ன செய்கிறாள் எனப் பார்க்கச் சென்றேன் .

இடம்மாறாமல் நேற்றிரவு படுத்த இடத்திலேயே படுத்திருந்தாள் சிட்டு கண்கள் வெறித்தபடி.

அருகிலிருந்த தட்டில் உணவுப் பருக்கைகள் கீழே கொட்டப்பட்டுக் கிடந்தன.

சிட்டுவின் வாயிலும் சில பருக்கைகள் ஈக்கள் மொய்த்தபடி இருந்தது.

அப்போது தான் புரிந்து கொண்டேன். தங்கள் இறுதி உணவை இருவரும் பகிர்ந்துண்டிருக்கிறார்கள் என்று.

கண்களில் வழிந்த நீரைத் துடைத் தவாறு கடப்பாரையையும் மண்வெட்டியையும் எடுத்து வந்து டாமியின் குழியைத் தோண்டத் தொடங்கினேன் .

அதற்குள் விழித்துக்கொண்ட பக்கத்து வீட்டுக்காரர் அய்யோ சிட்டு வும் போயிருச்சா என்றவாறே என்னருகில் வந்தார்.

தம்பி எதுக்கு டாமியோட குழியத் தோண்டறீங்க... சிட்டுவுக்கு தனியா ஒரு குழி தோண்டலாம் என்றார் கண்களில் நீர்கோர்த்தபடி...

“இல்லணே வாழ்நாள் முழுக்க ஒண்ணாவே இருந்து, ஒருத்தர் போன உடனே நான் உயிர் வாழமாட்டேன் னு உசுர விட்ட இந்த ரெண்டு பேருக்கும் ரெண்டு குழிகள் வேண்டியதில்ல, ஒரே ஒரு குழி மட்டுமே போதுமானதாய் இருக்கும் அண்ணே” என்றவாறு டாமியின் உடலோடு, சிட்டுவின் உடலையும் உள்ளே புதைத்து மண் கொண்டு நிரப்பத் தொடங்கினேன். கண்ணீரோடு ஆமோதித்தார் பக்கத்து வீட்டுக்காரர்.

வழிந்த கண்ணீர்த்துளிகளில் சிரித்த படியே தெரிந்தார்கள் டாமியும், சிட்டுவும்.

அப்போது வலிகளோடே இருட்டியிருந்த வானம் மெதுவாய் புலரத் தொடங்கியிருந்தது. ■

## பாழாய் போனக் கனவுகள்..!

வருடத்திற்கு ஒருமுறை
நாம் பிரிந்த இடத்திற்கு
சென்று வருவதை வழக்கமாக்கி கொண்டேன்!
அங்கே நீ நின்ற மரத்தடியில் நின்று பார்க்கிறேன்
இன்னும் அந்த நேசத்தை உணர்கிறேன்
வருடங்கள் பல கழிந்து விட்டது
அங்கே சுற்றிலும் மாறுபட்ட தோற்றங்கள்!
நினைவுகூர்ந்து காண்கையில்
இலையுதிர் காலத்தில் நம்மை
இலைகளால்.. பூக்களால் ஆசிர்வதித்த மரம்
இன்று இல்லை!
அந்த ஒற்றை வழி சாலையில்
சருகாய் கிடக்கிறது பாழாய் போன
நம் பழைய நேசத்தின் கனவுகள்..!

‘ பா ’




நெல்லையைச் சேர்ந்த இலக்கிய ஆர்வம் கொண்ட பத்து நண்பர்கள் சேர்ந்து ஆரம்பித்த காலாண்டிதழ் "காணிநிலம்" இரண்டு ஆண்டுகளை முடித்து மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. வழக்கமாக அட்டை உட்பட 44 பக்கங்கள் கொண்ட காணிநிலம் பத்தாவது இதழ் 64 பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. தனிச் சுற்றுக்கான இதழ் என்ற முறை யில் சந்தாதாரர்களுக்கு மட்டுமே அனுப்பப் படுகிறது.

கவிதைகள், கதைகள், இலக்கியம் சார்ந்தகட்டுரைகள்,நூல்அறிமுகம்ஆகிய பகுதிகள் இதழில் இடம்பெற்றுள்ளது. அனுபவம் வாய்ந்த படைப்பாளிகளோடு புதிய படைப்பாளிகளுக்கும் வாய்ப்பு வழங்குகிறார்கள்.

**தொடர்புக்கு:**

kaaninilam2018@gmail.com

**சந்தா விபரம்**

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ₹100/- |
| ஈராண்டுச் சந்தா | ₹200/- |
| ஐந்தாண்டிற்கு | ₹500/- |
| ஆயுள் சந்தா | ₹1000/- |

# பசுமை வனத்திற்குள் நுழைதல்

நீ விளையாடக் கேட்டாயெனக்
காலத்திடம் மன்றாடி
நம் பால்ய காலத்தைக்
கடன் வாங்கி வந்திருக்கிறேன்.
எடுத்துக் கொண்டுபோய்
என் நாட்களை
நான் தேடியதுபோல்
சிறு வயதில்
நீ தொலைத்த
உன் நாட்களைத் தேடிக் கொள்.
அறுவடையில் சிதறிக்கிடக்கும்
தானியங்களைக் கொத்தும்
பறவையென
தவறவிட்ட அம்மாவின்
முத்தங்களை
அப்பாவோடு பகிரா
அன்பின் தருணங்களை
சகோதரப் பற்றுதலை
திருவிழாக் கடைகளில்
வாங்க இயலாப் பொம்மைகளை
ஆற்றைக் கடக்கையில்
ரயிலின் சத்தத்தை
கிணற்று நீரில்
விழுந்துவிட்ட காசுகளை
இராட்டினத்தில்
சுற்றுகையில் எடுக்கத்
தவறிய கைக்குட்டையை
தெரியாத காதலை
பகையில்லா நட்பை
இப்படி இன்னும் ஏதேனும்
மீதம் இருந்தால் அதையும்
தொட்டுவிட்டு வா.
அப்படியே
இதுவரை நீ ஆடாத
விளையாட்டுக்களையெல்லாம்
அக்காலத்தோடு ஆடிக் கொள்.
காகிதத்தின்
அடியில் வைத்துப்
பென்சில் முனையால்
தேய்க்கக் கிடைத்த
காசுகளின் அச்சைப்போல்
செம்மண் பாதைகளில்
அன்று பதிந்த
உன் காலடித் தடங்கள்
இன்று காலம் எழுப்பிய
கான்கிரீட் தளங்களில்
இனி தெரியவா போகிறது?

**-அன்றிலன்**
குப்பிச்சிபுதூர்

# பொம்மைகள்

சிறுமிகள் பொம்மைகளை
"நீல" வண்ணத்தில்
ஒளிந்திருக்கும்
சில. ஆண்களும்...

மாணவிகள் பொம்மைகளை
பணத்தாசை பிடித்தலையும்
சில. பேராசிரியைகளும்...

தாஜ்மஹால்
இதயம் ரோஜா பொம்மைகளை
சில. காதலர்களும்...

துப்பாக்கி
டெட்டனேட்டர்
ஜெல்லட்டின் பொம்மைகளை
ஈவு இரக்கமற்ற
சில. தீவிரவாதிகளும்...

கோடரி ரம்பம்
அரிவாள் பொம்மைகளை
சில. மரம்வெட்டிகளும்...

பச்சோந்தி
காலில் விழும் பொம்மை
தலையாட்டி பொம்மைகளை
சில. அரசியல்வாதிகளும்...

திருவோடு
கோவணத்தாண்டி முருகன்
பொம்மைகளை
நப்பாசை பிடித்த
பல. வாக்காளப் பெருமக்களும்
வாங்கிக் கொண்டார்கள்.



ஆனாலும்...
கல்யாணக் காலத்தில்
உடம்பெல்லாம்
கைகள் முளைத்திருக்கும்
மாப்பிள்ளைக் கனவான்கள்
நிறைந்த
இந்த. லோகத்தில்
நெடுங்காலமாய்
விலை போகாமல்
ஏங்கிக் கிடக்கும்
முதிர்கன்னிப் பொம்மைகளுக்கு
எவ்விதம்
ஆறுதல் சொல்வாள்...
இந்த....பொம்மைக்காரி...?

**- ஜென்ஸி**

# மனிதநேயம்

சனனத்திற்கும் மரணத்துக்கும்
இடையில் இயந்திரமாய்
சுழன்று கொண்டிருக்கிறது
மனிதனின் வாழ்க்கை,


ஆசை, கோவம், களவு கொண்டு
மனிதம் மறந்து
போனோம்,

இந்த மானம் கெட்ட
மனிதரிடையே
மனிதம் மீண்டும்
மலரட்டும்,

மனிதநேயமிக்க மனிதர்கள்
மீது மலர்களைத்
தூவ முடியாவிடில்
முட்களை எறிந்து
காயப்படுத்தாதே,

எவ்வுயிரையும் தம்
உயிர்போல் நினை
முடியாவிடில் வாழும்
வரையாவது மனிதனாக இரு.

**ரஞ்சினி சந்திரமோகன்**





## நூல் விமர்சனம்


ஆசிரியர் செம்மல்
**நிர்மலாதேவி பன்னீர்செல்வம்**
எழுத்தாளர் - ஆசிரியர், மலேசியா


# செல்போன் பூதம்

சிறார் கதைகள்

நூலாசிரியர் : ஹாரிங்டன் ஹரிஹரன்

பாவைமதி வெளியீடு
55, வ.உ.சி நகர், மார்கெட் தெரு,
தண்டாரப்பேட்டை, சென்னை 600 081
91 94441 74272

88 பக்கங்கள் - விலை ₹ 80/




**தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு ( குறள் 396 )**

அண்மையில், "செல்போன் பூதம்" எனும் தலைப்பிலான சிறுவர் கதைகள் கொண்ட நூலைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. புத்தகத்தைக் கையில் கிடைக்கப்பெற்ற தருணத்திலேயே உடனே நூலைப் புரட்டியாக வேண்டும் என்ற ஆவலை எனக்குள் தூண்டியது, இந்நூலின் முகப்பு அட்டை. கரடி பொம்மையைப் பிடிக்காத சிறுவர்கள்தாம் உண்டோ? அவ்வகையில், சிறுவர்களுக்குப் பிடிக்கும் கரடி பொம்மைகளோடு அமைந்த வண்ணப் படங்கள்தாம் இதற்கு காரணம். அழகாகவும், சிறுவர்கள் மனதைச் சுண்டி இழுக்கும் வகையிலும் அட்டை தயாரிக்கப்பட்டிருந்தது மிகவும் சிறப்பு.

ஒவ்வொரு கதைகளாக வாசிக்கத் தொடங்கினேன். வாசித்தேன் என்பதைவிட உள்வாங்கிப் படித்தேன் என்பதே பொருத்தமாக அமையும். முதல் கதை 'விட்டுக்கொடு' எனும் தலைப்பில் தொடங்கியது. இக்கதையில் முயலும் குரங்கும் முக்கியக் கதாப்பாத்திரம். கதையின் முடிவில், 'தோற்றத்தை வைத்து எடை போடக் கூடாது' எனும் நன்னெறிப் பண்பை எடுத்துரைப்பதாக அமைந்தது.

இரண்டாவதாக, 'குர்க்குரே' எனும் தலைப்பிலான கதை. தலைப்பினைக் கண்ட எனக்கு முதலில் சிந்தனைக்கு எதுவும் புலப்படவில்லை. எனக்குள் ஒரு கேள்வியோடவே கதையைப் படிக்க தொடங்கினேன்.பிறகே உணர்ந்தேன். அது சிறுவர்கள் விரும்பி உண்ணும் தின்பண்டம் என்று. இக்கதையில். நாயும் குரங்கும் கதாப்பாத்திரமாக நடித்திருந்தது. இக்கதையின் வழி தற்கால சூழலுக்குத் தேவையான மிக அவசியமான நற்செய்தி கூறப்பட்டிருந்தது மிகவும் அருமை. நெகிழிப் பைகள் பயன்படுத்துவதனால் ஏற்படும் தீமைகளைச் சிறுவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் அழகாக எடுத்துரைக்கப்பட்டிருந்தது மிகவும் சிறப்பு.

இப்படியே, தொடர்ந்து படித்த ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு நல்ல பண்பினையும், வாழ்க்கைக்குத் தேவையான தகவல்களையும் எடுத்துரைப்பனவாக அமைந்தது. மேலும் கதையைப் படிக்கும்போதே, நினைவில் அக்காட்சிகள் திரையிட்டுக் காட்டுவது போல் ஓர் உணர்வு.அதற்கு காரணம், கதையின் நடை மற்றும் சொல்லாட்சி.

இதைத்தவிர, எழுத்தாளர் தனது பத்து கதைகளிலுமே சிறுவர்களுக்கு அதிகம் பிடித்த பிராணிகளையே கதாப்பாத்திரமாகப் பயன்படுத்தியிருப்பது கூடுதல் சிறப்பு.இது, சிறுவர்கள் மேலும் மேலும் இக்கதைகளைப் படிக்க ஆவலை ஏற்படுத்தும்.

தனது ஒன்பதாவது கதையில், நடப்பு வாழ்க்கையில் பெற்றோர்களுக்குத் தேவையான ஒரு செய்தியையும் எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளார். பிள்ளைகளை அவரவர் திறமைக்கு ஏற்ப விட்டுவிட வேண்டும் மாறாக பெற்றோரின் ஆசைகளைப் பிள்ளைகளிடம் திணிக்கக் கூடாது எனும் அற்புத கருத்தைச் சுவைபட, 'அவனா.. நீ' எனும் கதையின் வழி எடுத்துரைத்திருப்பது மிக அற்புதம்.

ஒட்டுமொத்தமாக எனது பார்வையில், 'செல்போன் பூதம்' எனும் கதைப் புத்தகம் மிகவும் திட்டமிடப்பட்டு பல கோணங்களில் சீர்தூக்கி கவனிக்கப்பட்டு சிறுவர்களுக்காக எழுதப்பட்ட விழிப்புணர்வு படைப்பு ஆகும். இதனைப் படிக்கும் ஒவ்வொரு சிறுவர்களும் நிச்சயமாக கதை கூறும் பண்பு நெறிகளை வாழ்வில் பின்பற்றி நடந்து பயன்பெறுவார்கள் என பெரிதும் நம்புகிறேன்.

தமது முதல் நூலே சமுதாயத்தின் தளிர்களான சிறுவர்களுக்கு நற்செய்திகளை ஊட்டும் நூலாக அமைந்திருப்பது மிகவும் மகிழ்ச்சி. எழுத்தாளர் ஹாரிங்டன் ஹரிஹரன் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துகளும் பாராட்டுகளும். வாழ்க வாழியவே.



# உண்மையல்லப் பொய்!

குணங்கெட்ட மாந்தரெலாம் கூடிக் கூடிக்
குவலயத்தில் வேந்தரென மாறிப் பாடிப்
பணத்துக்காய்ச் சேவைசெய்ய ஓடித் தேடிப்
பரிதவிக்கும் ஏழைகளின் வீட்டை நாடித்
துணையாக நானிருப்பே னென்று கூறித்
துடிப்பதெலாம் நடிப்பதெலாம் உண்மை யன்று...
மனத்தூய்மை யுற்றவரைக் கண்ட துண்டோ!
மறந்தும்நீ யவர்பின்னே சென்ற துண்டோ....

அறிவுப்பா லூட்டிவிட்ட ஔவை யாரை
அறத்தின்பால் வாழ்ந்துவந்த வள்ள லாரை
மறையோதி வழிகாட்டும் சித்தர் ஏட்டை
மயங்காத பாவாணர் செப்பும் கூற்றை
நிறைவான புத்திசொன்ன பெரியோ[யா]ர் மற்றும்
நெருப்பாகப் பாவேந்தர் பாடும் பாட்டை
மறந்தும்நீ கல்லாம லிருந்து கெட்டால்
மறுமையிலும் கேடும்மைத் தொடரு மன்றோ

இடைவந்த கூட்டமெலாம் மடையை மாற்றி
எழுதிவைத்த ஓலையிலே பொய்யைக் கூட்டிப்
படையின்றி உன்னறிவை உன்னை வைத்தே
பசப்புரையைச் செய்துன்னை மூட ராக்கும்
கடைந்தெடுத்த பொய்களிலே உண்மை இல்லை
கரையான்கள் கூட்டத்தால் அடைந்தோம் தொல்லை
தடைவந்து தனித்தமிழை என்ன செய்யும் ?
தண்டமிழின் இலக்கணத்தைக் கற்போம் இன்றே....

**தர்மா**



பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஆகஸ்ட் 2020



வாசம் வடிகட்டி வாசல்கள் மூடியிங்கு
நேசம் வடிகட்டும் நேர்வெல்லாம் – தேசத்தில்
அன்பும் வடிகட்டும் அந்நோய்ப் பிரிந்திடினும்
துன்பன்றோ வாரும் தொடர்ந்து.